# தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 26.07.2013

**வேளாண் துறையில் மாற்றங்களை இந்திய விஞ்ஞானிகள்தான் தீர்மானிக்க வேண்டும்**

வேளாண் துறையில் கண்டுபிடிப்புகளையம் மாற்றங்களையும்  விவசாயிகள் சங்கம் கண்மூடித்தனமாக எதிர்க்கவில்லை. இங்கு எத்தகைய மாற்றம் வேண்டும் என்பதை இந்திய விஞ்ஞானிகள்தான் தீர்மானிக்க வேண்டும் என்றார் விவசாயிகள் சங்க அகில இந்திய பொதுச்செயலர் கே.வரதராஜன் .

கடலூரில் நடைபெற்றுவரும் விவசாயிகள் சங்கத்தின் அகில இந்திய மாநாட்டில் பங்கேற்ற அவர் செய்தியாளர்களுக்கு வியாழக்கிழமை அளித்த பேட்டி: மத்திய அரசின் கொள்கைகளால் சுமார் 3 லட்சம் விவசாயிகள் நாடு முழுவதும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.  புதிய பொருளாதார கொள்கைகள் அமலாக்கத்துக்குப் பிறகு சராசரியாக நாள் ஒன்றுக்கு 50 விவசாயிகள் அதாவது ஒரு மணி நேரத்துக்கு 2 விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

உலக வர்த்தக சபை மாநாட்டில் மத்திய அரசு அரசு சில விஷயங்களில் அமெரிக்காவுக்கு பதில் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. உலக வர்த்தக ஒப்பந்தத்தை மீறி சில பகுதிகளில் விவசாய விளைபொருளுக்கான கொள்முதல் விலையை உயர்த்தியிருப்பதற்கு பதில் சொல்ல வேண்டுமாம். இது இந்திய விவசாயத்தில் அமெரிக்காவின் தலையீடு எந்த அளவுக்கு அனுமதிக்கப்படுகிறது என்பதற்கு உதாரணம்.

உற்பத்தி செலவைவிட கூடுதலாக 50 விழுக்காடு விலை நிர்ணயம் செய்ய வேண்டும், 4 விழுக்காடு வட்டியில் வங்கி கடன் வழங்க வேண்டும் போன்ற எம்.எஸ்.சுவாமிநாதன் கமிட்டியின் பரிந்துரைகளுக்கு மாறாக அமெரிக்க தலையீடு உள்ளது. இந்தியாவின் பாதுகாப்பு, தொலைதொடர்பு, காப்பீடு உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் அந்நிய முதலீடு அனுமதிக்கப்படுகிறது. இதற்கு தமிழக முதல்வர் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

எங்களது சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள இரண்டரை கோடி விவசாயிகள் மட்டும் போராடி அரசின் கொள்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தி விட முடியாது. இடதுசாரி விவசாயிகள் சங்க அமைப்புகள் மட்டுமல்லாமல் அனைத்து விதமான விவசாய அமைப்புகளும் விவசாயிகள் நலனைக் காக்கும் போராட்டத்தில் பங்கேற்க முன்வர வேண்டும். அதற்கான கோரிக்கைகளும், போராட்ட அறிவிப்பும் இந்த மாநாட்டின் முடிவாக அறிவிக்கப்பட உள்ளது.

காவிரி நீர் பிரச்னையில் தமிழக, கர்நாடக அரசுகளுடன் மத்திய அரசு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில் தீர்வு காண மத்திய அரசு முன்வர வேண்டும்.

விவசாயிகளின் ஒப்புதல் இல்லாமல் நிலம் கையகப்படுத்தக் கூடாது. நிலம் எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் அதற்கு ஈடான வேறு நிலம் வழங்க வேண்டும். சட்டப்படியான உரிமை நிலத்தின் மீது விவசாயிக்கு உறுதிப்படுத்த வேண்டும்.

அரசு தனியார் துறை கூட்டு (பிபிபி) என்கிற புதிய திட்டத்தன் படி விவசாயத்துக்கு தேவையான தண்ணீர் பணம் கொடுத்துதான் பெற வேண்டும் என்கிற நிலை ஏற்படுத்தப்படுகிறது. ஏற்கனவே நிலம் பறிக்கபட்டு வருகிறது. இப்போது நீரையும் தனியார் சொத்தாக மாற்றும் முயற்சி நடக்கிறது.

வேளாண் துறையில் புதிய கண்டுபிடிப்புகளை, மாற்றங்களை விவசாயிகள் சங்கம் கண்மூடித்தனமாக எதிர்க்கவில்லை. அதே வேளையில் இந்திய மண்ணுக்கு

எத்தகைய மாற்றங்கள் தேவை என்பதை இந்திய விஞ்ஞானிகள்தான் தீர்மானிக்க வேண்டும் என்றார்.

**பெண்களுக்கு விவசாயி அங்கீகாரம் கிடைப்பதில்லை'**

வேளாண்துறையில் அதிக பங்களிப்பை அளிக்கும் பெண்களுக்கு கூட விவசாயிகளுக்கான அங்கீகாரம் கிடைப்பதில்லை என ஜனநாயக மாதர் சங்கத்தின் அகில இந்திய செயலர் உ.வாசுகி கூறினார்.

கடலூரில் நடைபெற்ற அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் 33-வது மாநாட்டில் பங்கேற்று அவர் பேசியது:

நாட்டின் வேளாண்துறையின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட முடியாது.

ஆனால், புதிய பொருளாதாரக் கொள்கை அமல்படுத்தியவுடன் மத்திய அரசும், பன்னாட்டு நிறுவனங்களும் வேளாண்துறையை ஒரு பணம் செய்யும் தொழிலாக மட்டுமே பார்க்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

உலக அளவில் குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகளில் 44 சதவீதம் இந்தியாவில் உள்ளது.

புதிய பொருளாதாரக் கொள்கைகளால் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வேளாண் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள் மீது பாலியல் தாக்குதல் அதிகரித்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள், பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளனர்.

வளரும் நாடுகளில் உணவு உற்பத்தியில் பெண்களின் பங்களிப்பு 60 முதல் 80 சதவீதமாகவும், உலக அளவில் 50 சதவீதமாகவும் உள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

வேளாண்துறையில் அதிக பங்களிப்பை அளிக்கும் பெண்களுக்கு கூட விவசாயிகளுக்கான அங்கீகாரம் வழங்கப்படுவதில்லை என்றார் அவர்.

**விவசாயிகள் சங்க மாநாட்டு பிரசார வாகனத்துக்கு வரவேற்பு**

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் திண்டிவனம் நகருக்கு வந்த பிரச்சார வாகனத்திற்கு, அண்மையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் 33-ஆவது அகில இந்திய மாநாடு வரும் 27ம் தேதி வரை கடலூரில் நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்து திண்டிவனம் வழியாக சென்ற மாநாட்டு பிரச்சார வாகனத்துக்கும் அதனுடன் மாநாடு ஜோதி ஏந்தி வந்த குழுவினருக்கும் வரவேற்பு அளிக்கும் நிகழ்ச்சி, திண்டிவனம் மேம்பாலத்தின் கீழ் நடைபெற்றது.

அரூர் சட்டமன்ற உறுப்பினர் பி.டில்லிபாபு மாநாடு குறித்து சிறப்புரையாற்றினார். சங்கத்தின் மாவட்டக்குழு சார்பில் ஏ.ஜனார்த்தனன், வி.ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். சங்க நிர்வாகி சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

**கொடிவேரி பாசனத்துக்கு தண்ணீர்: காவிரி தீர்ப்புக்கு எதிரானது**

கொடிவேரி பாசனத்துக்கு கீழ்பவானி அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது, காவிரி தீர்ப்புக்கு எதிரானது என்று விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கீழ்பவானி விவசாயிகள் நலச் சங்கத்தின் தலைவர் நல்லசாமி பேசினார்.

திருப்பூர் மாவட்ட விவசாயிகள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் கோவிந்தராஜ் தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது.

இதில், கீழ்பவானி விவசாயிகள் நலச் சங்கத் தலைவர் நல்லசாமி பேசியது:

கொடிவேரி அணைப் பாசனம் ஈரோடு மாவட்டத்தில் உள்ளது. இதன் பாசனப் பரப்பளவு 24,504 ஏக்கர். காவிரி இறுதித் தீர்ப்பின்படி, குறுவை சாகுபடிக்கு நீர் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இப்பாசனத்திற்கு நீர் ஒதுக்கீடு 4.65 டி.எம்.சி ஆகும்.

பவானிசாகர் செயற்பொறியாளர் பரிந்துரையை மாவட்ட நிர்வாகமும், பொதுப்பணித்துறையும் ஏற்று ஜூன் 28-ஆம் தேதி கொடிவேரிப் பாசனத்திற்காக

கீழ்பவானி அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. இது காவிரி நதிநீர் தீர்ப்புக்கு புறம்பானது. மேலும் இது நீதிமன்ற அவமதிப்பு ஆகும்.

கொடிவேரி பாசனப் பகுதியில் நெல் பயிரிட, வேளாண்மைத்துறை விதை நெல்லை கொடுத்துள்ளது. அரசுத் துறைகளை நம்பி விவசாயிகளும் நெல் சாகுபடிக்கு தயாராகி வருகின்றனர். கொடிவேரி அணைப் பாசனப் பகுதியில் குறுவைப் பட்டத்தில் நெல் பயிரிட 11.08 டி.எம்.சி.தண்ணீர் தேவைப்படும். அதே நேரத்தில், கொடிவேரி அணைப் பாசனத்திற்கு மொத்த நீர் ஒதுக்கீடு 4.65 டி.எம்.சி ஆகும். பயிர் களை எடுப்புக்குப் பிறகு பயிருக்கான தண்ணீர் இல்லாமல் போகும்.

அப்போது பொதுப்பணித்துறை, தீர்ப்புக்கு எதிராக எங்கிருந்து தண்ணீர் கொண்டு வந்து கொடுத்துப் பயிரை காப்பாற்றப் போகிறது.

கடந்த ஆண்டு டெல்டா மாவட்டங்களில் பரவலாக சம்பா பயிர் காய்ந்து போனதைப் போல இதுவும் காய்ந்து போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மேலும், திருப்பூர் மாவட்டத்தில் உள்ள கீழ்பவானிப் பாசன விவசாயிகள் நலன் காக்கும் பொருட்டு, இதை தமிழக அரசின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் ஆட்சியர் கொண்டு செல்ல வேண்டும்.

**பவானிசாகரில் விதை நெல் இருப்பு**

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில், விவசாயிகளுக்குத் தேவையான விதை நெல், உளுந்து, தட்டைப்பயறு, பச்சைப்பயறு போதிய அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

பவானிசாகர் அணை நீர்மட்டம் 71 அடிக்கு மேல் உயர்ந்துள்ளதாலும் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருவதாலும் ஆகஸ்ட் 15-ஆம் தேதி கீழ்பவானி வாய்க்கால் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட வாய்ப்புள்ளது. இதனால், நடப்பாண்டு விவசாயிகள் நெல் மற்றும் பயறு வகைகள் சாகுபடி செய்யத் தயாராக உள்ளனர்.

விவசாயிகளுக்குத் தேவையான விதை நெல் ரகங்கள், வரப்பில் ஊன்றத் தேவையான உளுந்து, தட்டை மற்றும் பச்சைப்பயறு விதைகள் விற்பனைக்குத் தயார் நிலையில் உள்ளதாக, வேளாண்மை ஆராய்ச்சி நிலையத் தலைவர் மற்றும் பேராசிரியர் துரைசாமி புதன்கிழமை தெரிவித்துள்ளார்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 71.85 அடி**

பவானிசாகர் அணை நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 71.85 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 5,314 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,000 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 11.75 டி.எம்.சி.

பவானிசாகர் அணை நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 71.85 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 5,314 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,000 கனஅடி நீர்

திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 11.75 டி.எம்.சி.

**விவசாயிகளுக்குப் பயிற்சி**

கொடுமுடி அருகே கொம்பனைப்புதூரில் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடைபெற்றது.

காலிங்கராயன் பாசனப் பகுதி விவசாயிகளுக்கு விவசாயம் சார்ந்த தொழில் தொடங்க இலவசப் பயிற்சி முகாம் நடைபெற்றது. இம் முகாமை திருச்சியைச் சேர்ந்த தமிழ்நாடு பாசன மேலாண்மைப் பயிற்சி நிலைய பேராசிரியர்கள் நடத்தினர்.

இம் முகாமில், பருவத்துக்கு தகுந்த வேளாண் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உற்பத்தியை பெருக்குதல், மரம் வளர்ப்பு, கறவை மாடு வளர்ப்பு, ஆடு, கோழி, முயல் வளர்ப்பு, காளான், வண்ண மீன் வளர்ப்பு, விதைப் பண்ணை அமைத்தல் போன்றவை குறித்து பயிற்சி வழங்கப்பட்டது.

தமிழ்நாடு பாசன மேலாண்மை பயிற்சி நிலையப் பேராசிரியர் உதயகுமார், வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் ஹர்சவர்தனன், வேளாண் இணை இயக்குநர் கதிர்வேல் உள்ளிட்டோர் பயிற்சி அளித்தனர்.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு வியாழக்கிழமை நொடிக்கு 24,064 கன அடியாக அதிகரித்தது.

கர்நாடகத்தில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து பருவ மழை பெய்து வருவதால், அங்குள்ள அணைகள் நிரம்பின.

124.80 அடி கொள்ளளவு கொண்ட கிருஷ்ணராஜசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை 124.22 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 25,994 கன அடி நீர்வரத்து இருந்தது. நொடிக்கு 45,598 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

கடல்மட்ட அளவில் 2284 அடி உயரம் கொண்ட கபினி அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை 2882 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 35 ஆயிரம் கன அடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 40 ஆயிரம் கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

பிலிகுண்டுலுவில் நீர்வரத்து குறைகிறது:

கர்நாடக அணைகளிலிருந்து உபரி நீர் முழுவதுமாக வெளியேற்றப்பட்ட நிலையில், தமிழக எல்லையான பிலிகுண்டுலுவில் வியாழக்கிழமை காலை நீர்வரத்து நொடிக்கு 20 ஆயிரமாக இருந்தது. இது மாலையில் படிப்படியாக குறைந்து வருவதாக தேசிய நதிநீர் ஆணைய அலுவலர்கள் தெரிவித்தனர்.

கர்நாடக அணையிலிருந்து திறந்துவிடப்படும் தண்ணீர் தமிழக எல்லையை அடையும் முன்பாகவே, அங்குள்ள விவசாயிகள் அதிக திறன் கொண்ட மின் மோட்டார்கள் மூலம் நீரை உறிஞ்சுவதாகக் கூறப்படுகிறது.

மேட்டூருக்கு நீர்வரத்து அதிகரிப்பு: மேட்டூர் அணைக்கு புதன்கிழமை நொடிக்கு 19,075 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இது வியாழக்கிழமை 24,064 கன அடியாக அதிகரித்தது.

கர்நாடக அணைகளிலிருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் தமிழக எல்லையை முழுமையாக அடையும் போது, மேட்டூர் அணையின் நீர்வரத்து மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை 84.05 அடியாக உயர்ந்தது. குடிநீர்த் தேவைக்காக அணையிலிருந்து நொடிக்கு 3,794 கன அடி நீர் திறந்துவிடப்படுகிறது. நீர் இருப்பு 46.11 டி.எம்.சியாக உள்ளது.

**உழவர் மன்ற அமைப்பாளர்களுக்கு பயிற்சி**

வேளாண் சாகுபடியில் விவசாயிகள் அதிக மகசூல் பெறும் வழிமுறைகள் மற்றும் தொழில் நுட்பங்கள் குறித்து உழவர் மன்ற அமைப்பாளர்களுக்கு பயிற்சி குடுமியான்மலையில் அண்மையில் நடைபெற்றது.

பயிற்சியை மத்திய அரசுத்திட்ட வேளாண் துணை இயக்குநர் ஆர். சுதானந்தம் தொடக்கி வைத்தார். வேளாண் அலுவலர் எஸ். ராஜசேகரன், உழவர் மன்ற அமைப்பாளர்கள் நடப்பு பருவத்தில் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பம் குறித்தும், மத்திய அரசு செயல்படுத்தும் எண்ணெய்வித்து உற்பத்தி திட்டம், மக்காச்சோள பெருக்கத் திட்டம், விதை கிராமத் திட்டம் உள்ளிட்ட திட்டத்தில் விதைகள் மானியத்தில் பெறுவது குறித்து விளக்கிக் கூறினார்.

இதில், கேசிபி பவர் நிறுவன அலுவலர் செந்தில்குமார், சூரிய மின்சக்தியில் இயங்கும் மோட்டார் பம்ப் செட் செயல்பாடுகள் குறித்து விளக்கமளித்தார்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 84.57 அடியாக இருந்தது**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 84.57 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 24,217 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 2,999 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**மேட்டூர் அணையை ஆகஸ்ட் 2-வது வாரத்தில் திறக்க விவசாயிகள் வலியுறுத்தல்**

சம்பா சாகுபடிக்கு மேட்டூர் அணையை ஆகஸ்ட் 2-வது வாரத்தி ல் திறந்தால் போதுமானது என கருத்துத் தெரிவித்துள்ளனர் விவசாயிகள்.

திருவாரூர் ஆட்சியரகத்தில் வியாழக்கிழமை, ஆட்சியர் சி. நடராசன் தலைமையில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க் கூட்டத்தில் நடைபெற்ற விவாதம்:

மன்னார்குடி எஸ். ரெங்கநாதன் (காவிரி நீர்ப்பாசன விவசாயிகள் பாதுகாப்புச் சங்கப் பொதுச் செயலர்): மேட்டூர் அணை நிரம்பி வருவது மகிழ்ச்சி. இருப்பினும் தற்போது தண்ணீரைத் திறந்துவிட்டால் ஏற்கெனவே உள்ள வறட்சியால் பல டிஎம்சி தண்ணீர் பூமிக்குள் போய்விடும்.

ஆகவே தமிழகத்தில் மழை பெய்யும் வாய்ப்புள்ளதால் ஒரிரு முறை மழை பெய்தவுடன் அணையைத் திறந்தால் கடைமடைப் பகுதிகளுக்கு விரைவில் தண்ணீர் சென்று சேரும், நீரும் வீணாகாது என்பதால் சம்பாவுக்கு மேட்டூர் அணையை ஆக. 2-வது வாரத்தில் திறந்தால் போதும்.

வீ. ராமகிருஷ்ணன் : திருமலைராஜன் ஆற்றில் முடிகொண்டான் - கொத்தவாசல் இடையில் நீர் செறிவூட்டல் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். சொரக்குடி பகுதியில் நீண்ட நாள்களாக சேதமடைந்துள்ள ரெகுலேட்டர்களை தண்ணீர் வருவதற்குள் சரி செய்ய வேண்டும். வளப்பாறு, புத்தார், வெட்டாற்றில் சீமை காட்டாமணக்குச் செடிகளை இயந்திரம் மூலம் அகற்ற வேண்டும்.

ஜி. சேதுராமன்: மேட்டூர் பாசன ஆறுகளில் போர்க்கால அடிப்படையில் தூர்வாரும் பணியை மேற்கொள்ள வேண்டும். நிகழாண்டு சாகுபடிக்கு தரமிக்க விதை நெல், உரங்களைத் வழங்க வேண்டும்.

தங்கையா: இயற்கை விவசாயத்துக்கு ஊக்கமளிக்கும் வகையில் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தொழிலாளர் மன்றங்களை உருவாக்கி, விவசாயத்தைப் பாதுகாக்க வேண்டும்.

பழனிவேல்: விதை மானியம் அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் சமுதாய நாற்றாங்கால் திட்டத்தில் அனைத்து விவசாயிகளுக்கும் நாற்று கிடைக்கச் செய்ய வேண்டும்.

ஜெயராமன்: மேட்டூர் அணையை சரியான தருணத்தில் திறந்து சம்பாவைப் பாதுகாக்க வேண்டும். முள்ளியாறு வாய்க்காலைத் தூர்வார வேண்டுமெனப்

பலமுறை எடுத்துக் கூறியும் எந்த நடவடிக்கையும் இல்லை. எனவே பாசனத்துக்கு தண்ணீர் வருவதற்குள் இதைச் செய்ய வேண்டும்.

சாரநாதன்: கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகையை விரைந்து வழங்க மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்ச்செல்வி: சம்பா சாகுபடிக்கு சிஆர் 1009, ஆடுதுறை 39 வேளாண் துறை தரச்சான்றுடன் விதை வழங்குவதுடன், டிஏபி, யூரியா ஆகிய உரங்களைத் தட்டுப்பாடின்றி வழங்க வேண்டும். தேவையான நேரத்தில் விவசாயிகளுக்கு விவசாயத் தொழில்நுட்பங்களை வழங்க வேண்டும்.

கல்யாணசுந்தரம்: மேட்டூர் அணையிலிருந்து தற்போது திறந்துவிடப்பட்டுள்ள தண்ணீரை திருவாரூர் மாவட்ட ஆறுகளில் திறந்துவிட்டு கால்நடைகளைப் பாதுகாக்க வேண்டும். பாமணியாற்றில் கரைகளைப் பலப்படுத்த வேண்டும். விவசாயிகளுக்கு முன்கூட்டியே விதை கொடுக்க வேண்டும்.

பாண்டியன்: கூட்டுறவு வங்கியில் புதியக் கடனை நிபந்தனையின்றி வழங்க வேண்டும். கொடுக்கும் கடனை ஏற்கெனவே பெற்ற கடனில் வரவு வைக்கக் கூடாது. சம்பா சாகுபடிக்கு சரியான தருணத்தில் மேட்டூர் அணையைத் திறக்க அரசுக்கு மாவட்ட நிர்வாகம் பரிந்துரைக்க வேண்டும்.

கூட்டத்தில்  வருவாய் அலுவலர் பு. மணிமாறன், வேளாண் இணை இயக்குநர் க. மயில்வாகனன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு வியாழக்கிழமை நொடிக்கு 24,064 கன அடியாக அதிகரித்தது.

கர்நாடகத்தில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து பருவ மழை பெய்து வருவதால், அங்குள்ள அணைகள் நிரம்பின.

124.80 அடி கொள்ளளவு கொண்ட கிருஷ்ணராஜசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை 124.22 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 25,994 கன அடி நீர்வரத்து இருந்தது. நொடிக்கு 45,598 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

கடல்மட்ட அளவில் 2284 அடி உயரம் கொண்ட கபினி அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை 2882 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 35 ஆயிரம் கன அடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 40 ஆயிரம் கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

பிலிகுண்டுலுவில் நீர்வரத்து குறைகிறது:

கர்நாடக அணைகளிலிருந்து உபரி நீர் முழுவதுமாக வெளியேற்றப்பட்ட நிலையில், தமிழக எல்லையான பிலிகுண்டுலுவில் வியாழக்கிழமை காலை நீர்வரத்து நொடிக்கு 20 ஆயிரமாக இருந்தது. இது மாலையில் படிப்படியாக குறைந்து வருவதாக தேசிய நதிநீர் ஆணைய அலுவலர்கள் தெரிவித்தனர்.

கர்நாடக அணையிலிருந்து திறந்துவிடப்படும் தண்ணீர் தமிழக எல்லையை அடையும் முன்பாகவே, அங்குள்ள விவசாயிகள் அதிக திறன் கொண்ட மின் மோட்டார்கள் மூலம் நீரை உறிஞ்சுவதாகக் கூறப்படுகிறது.

மேட்டூருக்கு நீர்வரத்து அதிகரிப்பு: மேட்டூர் அணைக்கு புதன்கிழமை நொடிக்கு 19,075 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இது வியாழக்கிழமை 24,064 கன அடியாக அதிகரித்தது.

கர்நாடக அணைகளிலிருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் தமிழக எல்லையை முழுமையாக அடையும் போது, மேட்டூர் அணையின் நீர்வரத்து மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை 84.05 அடியாக உயர்ந்தது. குடிநீர்த் தேவைக்காக அணையிலிருந்து நொடிக்கு 3,794 கன அடி நீர் திறந்துவிடப்படுகிறது. நீர் இருப்பு 46.11 டி.எம்.சியாக உள்ளது.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 85 அடியாக உயர்வு**

தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால், கர்நாடகாவில் கடந்த ஒருவாரமாக கனமழை பெய்து வருகிறது.

இதனால் அந்த மாநிலத்தில் உள்ள கபினி மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகள் நிரம்பின. இதனையடுத்து அந்த அணைகளில் இருந்து உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. காவிரி ஆற்றில் அதிக அளவு தண்ணீர் திறந்து விடப்படுவதால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு விரைவில் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் இன்று காலை நிலவரப்படி 85 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 25 ஆயிரத்து 698 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து வினாடிக்கு 3 ஆயிரத்து 800 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

**வால்பாறையில் 80 மி.மீ. மழை**

தமிழகம் மற்றும் புதுவையில் வெள்ளிக்கிழமை மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வியாழக்கிழமை காலை வரையிலான நிலவரப்படி அதிக அளவாக கூடலூர், வால்பாறையில் 80 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. நடுவட்டம், தேவலா, பெரியாறு ஆகிய பகுதிகளில் 60 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. மணிமுத்தாறு (30 மி.மீ.), குளச்சல், கன்னியாகுமரி, பொள்ளாச்சி (20 மி.மீ.), குழித்துறை, பூதபாண்டி, நாகர்கோவில், அம்பாசமுத்திரம், ஊட்டி (10 மி.மீ.) ஆகிய பகுதிகளிலும் மழை பெய்துள்ளது.

**தழைக்க வேண்டும் ஏரிப்பாசனம்**

பஞ்ச பூதங்களாகிய நிலம், நீர், காற்று, தீ மற்றும் ஆகாயம் ஆகிய இவ்வைந்தினுள் நிலம், நீர் இவை இரண்டில் மட்டுமே தனி மனிதர்களின் ஆட்சி, அதிகாரம் தழைத்து ஓங்கியுள்ளது. ஏனெனில் இவை இரண்டில் மட்டுமே தனி மனிதர்களோ அல்லது அரசுகளோ உரிமை கொண்டாட முடிகிறது.

உதாரணமாக, மாநிலங்கள் (தமிழகம், கர்நாடகம் மற்றும் கேரளம்) இடையே உள்ள நீர் உடைமையிலுள்ள உரிமை மற்றும் நாடுகளுக்கு இடையே (இந்தியா - இலங்கை கச்சத்தீவு; இந்தியா - பாகிஸ்தான் இடையேயான காஷ்மீர்) உள்ள நில உரிமைப் பிரச்னை எனப் பல்வேறு நிலைகளில் இவைகளைக் கூறலாம்.

இந்த நிலம், நீர் உரிமைகள் தனி மனிதர்கள் மற்றும் அரசுகளின் அதிகார வரம்பில் இருக்கும்வரை அவற்றைப் பாதுகாத்து, சீர் செய்து பயன்படுத்திக் கொள்வது அவரவர்களின் கடமையாக உள்ளது.

ஆனால், இதே நிலம் மற்றும் நீர் உரிமைகள் பொதுச் சொத்துகளாக உள்ள நிலையில் அவற்றைப் பாதுகாப்பதும், பராமரிப்பதும் மிக மிகக் கடினமான செயலாகவே உள்ளது. அதுவும் இந்தியா போன்ற வளரும் நாடுகளில் இன்னும் மக்களிடையே படிப்பறிவு 100 சதவிகிதம் இல்லாத நிலையில் பொதுச் சொத்துகளைப் பராமரிப்பது மற்றும் பாதுகாப்பது பற்றிய விழிப்புணர்வு சிறிதும் இல்லாமல் இருப்பதால் அப்பொதுச் சொத்துகள் தனியார் மற்றும் அரசுகளால் பல்வேறு வழிகளில் அபகரிக்கப்படும் நிலையே தற்போது உள்ளது.

இதனால் வரும் பாதிப்பு தனி மனிதனுக்கு மட்டுமன்றி இயற்கை வளங்கள் சீர்கேடு மற்றும் சுற்றுச்சூழல் சமநிலை பாதிப்பு போன்ற பல்வேறு இன்னல்களால் பெருவாரியான மக்கள் பாதிப்படையும் சூழ்நிலை அதிகரித்துக்கொண்டே வருகிறது. மேற்கூறப்பட்ட பிரச்னைகளின் மொத்த வடிவமாகத் திகழ்வது தற்போதைய ஏரிப்பாசனம்.

தமிழகத்தின் மூன்று முக்கிய பாசன ஆதாரங்கள்: கால்வாய், ஏரி மற்றும் கிணறு. கால்வாயும் ஏரிகளும் தமிழகத்தில் பொது நீர்ப்பாசனத்தில் வருகின்றன. கால்வாய்

பாசனத்தில் ஏறத்தாழ 100 சதவிகிதம் பராமரிப்பு மேலாண்மையை பொதுப்பணித் துறையே மேற்கொண்டு வருகிறது. ஆனால், இதே நிலையில் இருக்க வேண்டிய ஏரிப் பாசனத்தின் பராமரிப்பு மேலாண்மை பல நிலைகளில் சீரழிக்கப்பட்டு, உபயோகமற்ற - செயல்படுத்த இயலாத பல்வேறு சட்டங்கள் மற்றும் அரசு ஆணைகளால் ஏரிப்பாசனம் மெல்லச் செயல் இழந்து வருகிறது. இதன் வெளிப்பாடே தமிழகத்தின் 41,000 ஏரிகள் மூலம் 10 லட்சம் ஹெக்டேருக்கும் அதிகமான பதிவு செய்யப்பட்ட ஏரிப்பாசன ஆயக்கட்டில் நல்ல மழை பெறும் காலங்களிலும் சமீப ஆண்டுகளில் 5 முதல் 6 லட்சம் ஹெக்டேர் மட்டுமே பாசனம் செய்யும் நிலை உள்ளது.

மூன்றில் ஒரு பங்குக்கு மேல் தமிழக விவசாயிகளுக்குப் பாசன ஆதாரமாக விளங்கும் ஏரிகள் அதன் பொழிவை இழந்து வருகின்றன. இதன் அடிப்படைக் காரணம் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக ஏரிகளின் மூலம் கிடைக்கின்ற வருவாய் ஆதாரங்களான ஏரி வண்டல்மண் அகற்றுதல், ஏரிகளில் மீன் வளர்ப்பு மற்றும் மரம் வெட்டுதல் போன்ற பல்வேறு வகையான வருவாய்களை அரசே எடுத்துக்கொண்டு பல்வேறு வகைகளில் விவசாயிகளுக்குப் பயனில்லாத அரசாணைகள் மூலம் அப்பாவி ஏரிப்பாசன விவசாயிகளை தங்கள் வயல் மேம்பாட்டுக்குக்கூட ஏரிகளின் வண்டல் மண்ணை உபயோகிக்க இயலாத நிலைக்குத் தற்போது தள்ளியுள்ளது.

உதாரணமாக, வருவாய்த் துறை; பொதுப்பணித் துறை; மீன்வளத் துறை; வனத் துறை மற்றும் கனிம வளத்துறை போன்ற பல துறையினர் ஏரிப்பாசன விவசாயிகளை அரவணைத்து ஏரிகளின் மேம்பாட்டிற்கு உதவாமல் ஏரிகளில் இருந்து கிடைக்கும் வருவாயையே குறியாகக் கருதி தற்போது செயல்பட்டு வரும்போது ஏரிகளைப் பயன்படுத்தும் ஒவ்வொரு விவசாயியும் சொல்லொணாத் துயருடன் காலம் கழித்து வருகின்றனர்.

தற்போது தமிழகத்தின் ஒவ்வோர் ஏரியிலும் உள்ள முக்கியப் பிரச்னைகளாக இருப்பவை; நில அபகரிப்பு; ஏரி நீர்ப்பரப்பில் பேரளவு மண் குவிந்து அதன்

கொள்ளளவு குறைந்துள்ள நிலை; நீர்வரத்துக் கால்வாய்களின் சீரழிந்த மற்றும் மறைந்த நிலை; மதகுகளும், கலிங்குகளும் உபயோகிப்பாளர்களின் முழுத் திருப்தியுடன் இயக்க மற்றும் இயங்க இயலாத நிலை; மற்றும் தங்களது ஏரிப்பாசனப் பிரச்னைகளை உரிய சட்டம் (தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டம் - 2000; சட்டம் எண் 7/ 2001) இயற்றப்பட்டும் அதன் மூலம் எப்படி பல்வேறு வகையான பிரச்னைகளை முழுமையாகத் தீர்த்துக்கொள்வது என அறியாத நிலை போன்றவை.

இப்பிரச்னைகளுக்கெல்லாம் சிகரமாக விளங்குவது, கடந்த 10 ஆண்டுகளாக அமைக்கப்பட்டுள்ள பல்லாயிரம் ஏரிப்பாசன சங்கங்களுக்கு எவ்வித வருவாயும் இல்லாத நிலை ஆகும். ஒவ்வோர் ஏரியும் தங்களின் பிரச்னைகளைச் சொல்ல இயலவில்லையே என கண்ணீர் வடித்துக்கொண்டே விவசாயிகளுக்குத் தாராளமாக உதவி வருவதோடு அரசுக்கும் நிதியளிக்கிறது.

வண்டல் மண் வருவாய்; மீன் ஏல வருவாய் மற்றும் மர ஏல வருவாய் என பல்வேறு வருவாயை ஏரிகள் அளித்தபோதும் அவை அனைத்தும் அரசின் பொது நிதியில் சேர்க்கப்பட்டு வரிகளை உபயோகிப்பவர்கள் ஏரிகளின் வருவாய் முழுமையாகச் சுரண்டப்படுவதை பார்த்துக்கொண்டு வாய்மூடி மௌனிகளாக இருக்கும் நிலையே இன்று உள்ளது.

இச்சூழ்நிலையில், பெருவாரியான ஏரிகளில் சட்டப்படி அமைக்கப்பட்டுள்ள பாசன சங்கங்களின் தலைவர்கள் மற்றும் தொகுதி மேம்பாட்டு உறுப்பினர்கள் தங்களுக்கு இப் பாசன சங்கங்களால் எவ்விதப் பயனுமில்லை எனக் கூறுவதோடு ஏரிகளின் வளங்களிலிருந்து கிடைக்கும் வருவாயைப் பெற்று ஏரிகளைப் பராமரிக்கத் தங்களுக்கு எவ்வித அதிகாரமும் இல்லாததால், இச்சங்கங்களின் மேல் விவசாயிகளுக்கு எவ்வித மதிப்போ, அக்கறையோ இதுவரை ஏற்படாமல் கடந்த 10 ஆண்டுகளாக இச்சங்கங்கள் சட்டப்படி அமைக்கப்பட்டும், "தூங்கும் சங்கங்களாகவே' இருப்பதாக பாசன சங்க உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, ஏரி வளங்களிலிருந்து கிடைக்கும் வருவாயில் பாதியை இப்பாசனச் சங்கங்களுக்கு அவற்றின் வங்கிக் கணக்கில் முழுமையாகக் கிடைக்க உடனடியாக வழிவகை செய்தாலன்றி இச்சங்கங்கள் செயல்பட இயலாது. இப்பாசனச் சங்கங்கள் திறம்படச் செயல்பட இயலாதபொழுது ஏரிகளின் மேம்பாடு ஏட்டளவில்தான் இருக்கும். காலப்போக்கில் ஏரிகளே மறைந்து போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தமிழக அரசு 2001-ஆம் ஆண்டு இயற்றிய பாசன மேலாண்மைச் சட்டம் இன்றளவும் செயல்பட இயலாமல் உள்ளது. ஒரு சட்டம் இயற்றினால் அச் சட்டம் இயற்றுவதற்கு முன்பு அது சம்பந்தமாக இருந்த சட்டங்கள், அரசு ஆணைகள் எல்லாம் முழுமையாக ஆராயப்பட்டு அவை எல்லாம் ஒன்று சேர்க்கப்பட்டு புதிய சட்டம் இயற்றப்பட வேண்டும். அப்பொழுதுதான் புதிய சட்டம் வலுவாக செயலுக்கு வர முடியும்.

ஆனால், முன்பு இருந்த, ஏரிகளின் மூலம் அரசுக்கு வருவாய் கிடைக்கும் அரசு ஆணைகள் எதையும் மாற்றாமல் எவ்விதப் பயனுமற்ற புதிய சட்டத்தை இயற்றி ஏரிப்பாசன விவசாயிகள் அனைவரும் இப்புதிய சட்டப்படிதான் செயல்பட வேண்டும் என வலியுறுத்துவது "சட்டியில் இல்லாமல் சாப்பாட்டுக்கு அமர்ந்தது' போன்ற நிலைக்கு ஒத்ததாக உள்ளது. இதனால் ஒவ்வொரு விவசாயியும், இச்சட்டம் பற்றிக் கூறினால் குமுறி வருகின்றனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசு தாமாக முன்வந்து பிரச்னைகளின் தீவிரம் அறிந்து ஒவ்வொரு ஏரியிலும் அதன் வருவாய் ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் வருவாயில் குறைந்தபட்சம் 50 சதவிகிதத்தையாவது உடனடியாக அந்தந்த ஏரிப்பாசன சங்கங்களுக்கு அளிக்க முன் வந்தால் அதனைப் பராமரிப்புப் பணிகளுக்குப் பயன்படுத்தி ஏரிப்பாசனம் தழைக்க வழியுண்டு. ஏரிப்பாசன விவசாயிகளும் முழுமையாக ஊக்கம்பெற்று முனைப்புடன் செயல்படுவர். இதன் மூலம் விளைபொருள் உற்பத்தியும் பெருகும்.

(கட்டுரையாளர்: சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின் துணைப் பேராசிரியர்)

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**26.07.2013**

## மழையை எதிர்பார்க்கும் நத்தம் விவசாயிகள்

நத்தம்:நத்தம் தொகுதியில் விவசாயக் கிணறுகளில் தண்ணீரில் இல்லாததால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். நத்தம்,சாணார்பட்டி ஒன்றியங்களில் கடந்த 2 ஆண்டுகளாக விவசாயத் திற்கேற்ற மழையில்லாததால், நிலத்தடி நீர்மட்டம் குறைந்தது.இதனால் சாகுபடி செய்யப்பட்ட இறவை மற்றும் மானாவாரிபயிர்கள் காய்ந்தன.

மேலும் தொடர்ச்சியாக கடந்தாண்டுகளில் 3 மாதத்திற்கு முன் ஏற்பட்ட மின் தட்டுப்பாட்டாலும், ஒரு சில விவசாயக்கிணறுகளில் ஓரளவு இருந்த தண்ணீரை பயிர்களுக்கு பாய்ச்ச முடியாமலும் விவசாயம் பாதித்தன.தற்போது, தடையில்லா மின்சாரம் கிடைக்கிறது. இருந்தும் கூட மழையின்றி ஏற்பட்ட வறட்சியால் விவசாயக்கிணறுகளில் தண்ணீரில்லை. இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். மழையை விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## பெரியாறு நீர்மட்டம் உயர்வால்18ம் கால்வாய் திறக்கப்படுமா? விவசாயிகள் எதிர்பார்ப்பு

கூடலூர்:பெரியாறு அணை நீர்மட்டம் உயர்ந்து வருவதால், 18ம் கால்வாயில் தண்ணீர் திறந்து விடப்படுமா, என விவசாயிகள் எதிர்பார்ப்பில் உள்ளனர். பெரியாறு அணைப்பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் மழையால், அணையின் நீர்மட்டம் 130 அடியை எட்டியுள்ளது. இதே போல் இன்னும் சில தினங்கள் மழை பெய்தால் 136 அடியை எட்டும் வாய்ப்பு உள்ளது. 136 அடிக்கு மேல் உள்ள

தண்ணீர் வீணாக, அணையை ஒட்டியுள்ள ஷட்டர் வழியாக வெளியேறி அரபிக்கடலை அடைந்து விடும். இந்த சமயத்தில், லோயர்கேம்பில் துவங்கும் 18ம் கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டால், லோயர்கேம்ப், கூடலூர், கம்பம், உத்தமபாளையம், கோம்பை, பண்ணைப்புரம், தேவாரம், மீனாட்சிபுரம், போடி ஆகிய பகுதிகளில் உள்ள குளங்கள் நிரம்புவதுடன், நிலத்தடி நீர்மட்டம் உயரும். கடந்த ஆண்டு மழை குறைவு காரணமாக, 18ம் கால்வாயில் தண்ணீர் திறக்கப்படாததால், இப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து, மானாவாரி விளைச்சலும் பாதிக்கப்பட்டது.

தற்போது, 18ம் கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டால், கடந்த ஆண்டு விவசாயத்தில் ஏற்பட்ட இழப்பை சரிசெய்ய முடியும், என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் உள்ளனர்.

### இலவம் சாகுபடி விவசாயிகள்...விலை கிடைக்காததால் கவலை

வருஷநாடு:இலவம் பஞ்சுக்கு விலை கிடைக்காததால்,தேனி மாவட்டம் வருஷநாடு பகுதிகளில், விவசாயிகள் இலவமரங்களை வெட்டி அழித்து வருகின்றனர். வருஷநாடு, வாலிப்பாறை, தும்மக்குண்டு, முருக்கோடை, வண்டியூர்,காந்திக்கிராமம்,காமராஜபுரம், சிங்கராஜபுரம்,சாந்திபுரம்,

### நாற்றங்கால் நனைதல்செயல்முறை விளக்கம்

மதுரை வேளாண்மை கல்லூரி மாணவர்கள் பரத்வாஜ், அம்பிகாபதி, ஆனந்தன், பெருமாள், மோகன், கார்த்திக் ஆகியோர் சின்னமனூர் பகுதியில் முகாமிட்டுள்ளனர்.

இம்மாணவர்கள் சின்னமனூர் வேளாண்மை உதவி இயக்குனர் அழகு நாகேந்திரன் முன்னிலையில், கருங்கட்டான் குளம் பகுதியில், விவசாயிகளுக்கு நெல் நாற்றங்கால் நனைதல் குறித்த செயல் விளக்கங்களை செய்து காட்டினர். நாற்று நடவிற்கு முன்பாக நெல் நாற்றங்கால்களில், சூடோமோனால் என்ற உயிர்

உரத்தை ஒரு லிட்டருக்கு 3 கிராம் என்ற அளவில் கலந்து அரை மணிநேரம் நனைக்க வேண்டும். பின்னர் அதனை நடவு செய்து, காற்றில் உள்ள தழை சத்தையும், இதர சத்துக்களையும் பெறலாம். இத்துடன் மண்ணின் வளத்தையும் பெருக்க முடியும். பூச்சி நோய் தாக்குதலையும் குறைக்கலாம். இச்செயல்முறை விளக்கத்தின் போது, வேளாண்மை அலுவலர்கள், உதவி அலுவலர்கள் பங்கேற்றனர்.

## பாபநாசம் அணை நீர்மட்டம் உயர்வு

விக்கிரமசிங்கபுரம்:பாபநாசம் அணையின் நீர்மட்டம் நேற்று சுமார் ஒன்றரை அடி அதிகரித்து 123.95 அடியானது. நேற்று முன்தினம் 122.40 அடியாக இருந்த பாபநாசம் அணையின் நீர்மட்டம் நேற்று சுமார் ஒன்றரை அடி அதிகரித்து 123.95 அடியானது. அணைக்கு விநாடிக்கு 3260.67 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 1550 கனஅடி நீர் வெளியேறியது. அணை பகுதியில் 50மி.மீ, பாபநாசம் கீழ் அணையில் 24மி.மீ, சேர்வலாறு அணையில் 41மி.மீ, மணிமுத்தாறில் 28.4மி.மீ, அம்பையில் 13.2 மி.மீ, சேரன்மகாதேவியில் 4மி.மீ அளவில் மழையின் அளவு பதிவாகியுள்ளது. நேற்று சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 133.69 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 63.65 அடியாகவும் இருந்தது. மணிமுத்தாறு அணைக்கு நேற்று 786 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 75 கனஅடி நீர் வெளியேறியது.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருச்சியில் இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடக்கிறது.

திருச்சி கலெக்டர் ஜெயஸ்ரீ அறிக்கை:

திருச்சி மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம், 26ம் தேதி (இன்று) காலை, 10.30 மணிக்கு கலெக்டர்

அலுவலகத்தில் நடக்கிறது.

இக்கூட்டத்தில் விவசாயிகள், சங்க
பிரதிநிதிகள் கலந்துகொண்டு, மனுக்கள் மூலமாக தங்களது கோரிக்கைகளை
தெரிவித்து, நிவர்த்தி பெறலாம்.
இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பழைய ஆயக்கட்டு பகுதிக்கு தண்ணீர் விவசாயி சங்கத்தினர் வலியுறுத்தல்

கரூர்: "அமராவதி அணையிலிருந்து பழைய ஆயக்கட்டு பகுதிக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும்' என, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.
தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டக் குழுக் கூட்டம் கரூரில் நடந்தது.
இதில், சங்கத்தின் மாவட்டத் தலைவர் தங்கவேல் தலைமைவகித்தார். மாவட்டச் செயலாளர் குருநாதன், துணைத் தலைவர் சேசன் முன்னிலை வகித்தனர்.
அமராவதி அணையிலிருந்து பழைய ஆயக்கட்டு பகுதிக்கும், விவசாயத் தேவைக்கும், குடிநீர்பயன்பாட்டுக்கும் தண்ணீர் திறந்துவிட வேண்டும். எம்.எஸ். சாமிநாதன் பரிந்துரையை ஏற்று விவசாய விளைப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும்.
காவிரியாற்றில் மணல் அள்ளுவதை தடுத்து நிறுத்தி, நீர் ஆதாரத்தை பாதுகாக்க வேண்டும். வறட்சியால் காய்ந்து போன தென்னை மரங்களுக்கு இழப்பீடு தொகை வழங்க வேண்டும். சனப்பிரட்டி பகுதியிலுள்ள ராஜவாய்க்காலில் கழிவுநீரைத் திறந்து விடும் சாயப்பட்டறைகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.
கூட்டத்தில் நிர்வாகிகள் அரசன், தாமரைச்செல்வன், நடேசன், முன்னாள் ஒன்றியக் குழு உறுப்பினர் பி. ராமசாமி உள்ளிட்டோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

## காய்கறி கழிவுகளில் மின்சாரம் தயாரிக்க திட்டம் : திட்ட மதிப்பீடு தயார் செய்யும் பணி ஜரூர்

சேலம்: சேலம் மாநகராட்சியில், காய்கறி கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும், "பயோ மெத்தனைஷேசன்' திட்டத்தை செயல்படுத்ததிட்ட மதிப்பீடு தயார் செய்யும் பணி நடந்து வருகிறது.சேலம் மாநகராட்சியில், நாள்தோறும், 600 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. ஹோட்டல் கழிவுகள், இறைச்சி கழிவுகள், உழவர் சந்தை மற்றும் தினசரி காய்கறி மார்க்கெட்டுகள் ஆகியவற்றில் இருந்து, நாளுக்கு நாள் குப்பைகள் அதிகரித்து வருகிறது.செட்டிசாவடியில், திடக்கழிவு மேலாண்மை திட்டத்துக்கு, தினமும், 200 டன் குப்பைகள் மட்டுமே பெறப்படுகிறது. குப்பைகளை அள்ளி செல்லும் டிராக்டர் டிரைவர்கள், பொதுமக்களின் எதிர்ப்பை மீறி, கிச்சிப்பாளையம், வீராணம் ஆகிய குப்பை மேடுகளில், கழிவுகளை கொட்டி வருகின்றனர். பலர் புறம்போக்கு நிலங்கள், ஓடைகள் ஆகியவற்றில், குப்பைகளை கொட்டி, சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தி வருகின்றனர்.அதனால், சேலம் மாநகராட்சியில், பயோ மெத்தனைஷேசன், முறையில், காய்கறி கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது.சேலம் மாநகர பகுதியில், தினமும், 150 டன் வரை, காய்கறி கழிவுகள் சேகரிக்கப்படுகிறது. இந்த கழிவுகளை, வீராணம் குப்பை மேடு பகுதிக்கு எடுத்து சென்று, அங்கு எரிவாயுவாக மாற்றி, அதிலிருந்து மின்சாரம் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் மூலம், மாநகராட்சி தெரு விளக்குகளை எரிய வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.இதன் மூலம், மாநகரில் மலைபோல தேங்கி கிடக்கும் காய்கறி கழிவுகள், எந்த விதமான சிக்கலும் இல்லாமல், உடனுக்குடன் அப்புறப்படுத்துவதற்கான வாய்ப்பு உள்ளது.இதுகுறித்து மாநகராட்சி கமிஷனர் அசோகன் கூறியதாவது:சேலம் மாநகராட்சியில், ஒரு கோடியே, 50 லட்சம் ரூபாய் மதிப்பில், ஹோட்டல் மற்றும் காய்கறி கழிவுகளில் இருந்து பயோ கேஸ் மூலமாக

மின்சாரம் தயாரிக்கும், "பயோ மெத்தனைஷேசன்' திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.வீராணம் பகுதியில், இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அங்கு, 10 ஆயிரம் சதுர அடியில், 10 கிலோ வாட் மின்சாரம் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான திட்ட மதிப்பீடு தயார் செய்யும் பணி நடந்து வருகிறது.இவ்வாறு கூறினார்.

## குறுவை நெல் சாகுபடிக்கு...தயார்! களமிறங்கிய விவசாயிகள்

மடத்துக்குளம்:மடத்துக்குளம் பகுதியில், குறுவைநெல்சாகுபடிக்கு நம்பிக்கையோடு விவசாயிகள் தயாராகி வருகின்றனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததால், மடத்துக்குளம் பகுதியில் விவசாய நிலங்கள் வானம் பார்த்த பூமியாக இருந்தது.

இதனால் விவசாயிகள் கவலையடைந்தனர். இந்த ஆண்டு பருவமழை பெய்யத்தொடங்கியுள்ளதால், குறுவை நெல் சாகுபடிக்கு விவசாயிகள் ஆர்வமுடன் தயாராகியுள்ளனர்.

மடத்துக்குளம் அமராவதி பழைய ஆயக்கட்டு பகுதியில், 20 ஆயிரம் ஏக்கருக்கும் மேல் விளைநிலங்கள் உள்ளன. இதில் கரும்பு, வாழை, தென்னை, மக்காச்சோளம் ஆகியவை

18 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டுள்ளன. நெல்சாகுபடி செய்ய மூன்றாயிரம் ஏக்கர் விளைநிலத்தை விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். வழக்கமாக ஆண்டுதோறும் இந்த விகிதத்தில் பயிர் செய்து மகசூல் பெறுவர். இதனால், மடத்துக்குளம் பகுதியில் செழிப்பும், வளமையும் இணைந்து விவசாயிகளையும், மக்களையும் மகிழ்வித்தன. ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளில் தொடர்ந்து பருவமழை பொய்த்ததால் பயிர்கள் காய்ந்து போனதுடன், அவற் றை காப்பாற்ற முடியாத நிலைக்குச்சென்றனர். இந்த ஆண்டு

மேற்குதொடர்ச்சிமலையில் பெய்துவரும் தென்மேற்குபருவமழையால், அமராவதி அணையில் நீர்மட்டம் ஆறுதல் தரும் விதமாக உயர்ந்து வருகிறது. இதனால் விவசாயிகளும், பொது மக்களும் மகிழ்ச்சியடைந்தனர்.

இந்த நீர்மட்டத்தை குறுவைச்சாகுபடிக்கு பயன்படுத்த தீர்மானித்தனர். இதனைத்தொடர்ந்து அமராவதி ஆற்றில் பாசனநீர் திறக்க விவசாயிகள் சார்பாக தமிழக அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. இதனை ஏற்ற அரசு, சாகுபடிக்கு தேவையான நீரை, 135 நாட்கள் குறிப்பிட்ட இடைவெளிகளில் அணையிலிருந்து திறக்க உறுதி வழங்கியது. முதல் கட்டமாக கடந்த மாதம் 29ம்தேதி பாசனத்துக்கு நீர் திறக்கப்பட்டது. இந்த பாசனநீரை பயன்படுத்தி, விவசாயிகள் உழவு செய்து நாற்றுகளை பயிரிட்டுள்ளனர். இந்நிலையில், பருவமழையும் கைகொடுத்து வருவதால் நாற்றுகள் ஆரோக்கியமாக வளர்ந்துள்ளன.

கடந்த ஆண்டுகளை போல், மூன்றாயிரம் ஏக்கர் நிலப்
பரப்பை நெல்சாகுபடிக்கு பயன்படுத்தாமல், இந்த ஆண்டு இரண்டாயிரம் ஏக்கர் பகுதியில் சாகுபடிபணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். மடத்துக்குளத்தின் பல்வேறு பகுதிவிளைநிலங்களில், இதற்கு தேவையான நாற்றுகளை உருவாக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

வேளாண்துறை அறிவுரை வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் செல்வராஜ் கூறுகையில், ""தற்போது செய்யப்படும் சாகுபடியை "திருந்திய நெல் சாகுபடி' முறையில் செய்தால் குறைந்த செலவில் அதிக லாபம் கிடைக்கும்.

இந்த முறையில் சாகுபடி செய்வதற்கு அரசு சார்பில் மானியங்கள் வழங்கப்படுகின்றன. மடத்துக்குளம் வட்டார வேளாண்மை அலுவலகத்தில் விதை நெல்இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தேவையான வழிகாட்டுதல்களும் இந்தத் றையின் மூலம் வழங்கப் படும்,'' என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**26.07.2013**

## தென்னை, கரும்பு, மஞ்சள் பயிர்களை காப்பாற்ற கீழ்பவானியில் நாளை தண்ணீர் திறப்பு

ஈரோடு: கீழ்பவானி வாய்க்காலில் 15 நாட்களுக்கு உயிர் தண்ணீர் திறக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இதன்படி நாளை தண்ணீர் திறக்கப்பட உள்ளது. விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளான நீலகிரி மாவட்டம் மற்றும் கேரளாவில் பெய்து வரும்  கனமழையால் அணைக்கு நீர்வரத்து கடந்த சில நாட்களாக அதிகரித்துள்ளது. கடந்த வாரம் ஆயிரம் முதல் 1500 கனஅடியாக இருந்த நீர்வரத்து தற்போது 3 ஆயிரம் 5 ஆயிரம் கனஅடியாக படிப்படியாக அதிகரித்துள்ளது. இதன் காரணமாக பவானிசாகர் அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.

நேற்று முன்தினம் காலை 70 அடியாக இருந்த பவானிசாகர் அணையின் நீர்மட்டம் தொடர் நீர்வரத்து காரணமாக நேற்று காலை ஒரு அடி உயர்ந்து 71 அடியாக இருந்தது. அணைக்கு 4543 கனஅடி வீதம் நீர்வரத்துள்ளது. அதேசமயம் தடப்பள்ளி-அரக்கன்கோட்டை பாசனத்துக்கும், குடிநீர் தேவைக்கு 900 கனஅடி வீதம் பவானி ஆற்றின் வழியே தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. நீர்வரத்து அதிகரிப்பால் அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.

பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி பாசனத்திற்கு அட்டவணைபடி ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி தண்ணீர் திறந்துவிட வேண்டும். ஆனால் கடந்த ஆண்டு

அணையின் நீர்மட்டத்தை கருத்தில் கொண்டு தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால் பாசன பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டது. தற்போது கீழ்பவானி பாசனத்துக்குட்பட்ட பகுதிகளில் காய்ந்து வரும் தென்னை, கரும்பு, மஞ்சள் பயிர்களை காப்பாற்ற உயிர் தண்ணீர் திறந்து விட வேண்டும் என கீழ்பவானி பாசன விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்தனர். இதனிடையே வறட்சியை சமாளிக்கும் வகையிலும், கால்நடைகளின் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையிலும் நாளை (26ம் தேதி) முதல் பவானிசாகர் அணையில் இருந்து பிரதான கால்வாயில் முதல்முறை பாசன பகுதிகளுக்கும், சென்னசமுத்திரம் பகிர்மான கால்வாயில் முதல்முறை பாசன பகுதிகளுக்கும் 15 நாட்களுக்கு உயிர் தண்ணீர் திறந்துவிட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. தண்ணீர் திறக்க உத்தரவிட்டுள்ள தமிழக அரசுக்கு தமிழக விவசாயிகள் சங்கம்(நாராயணசாமிநாயுடு பிரிவு) உள்ளிட்ட பல்வேறு சங்கங்கள் வரவேற்பு தெரிவித்துள்ளன.

**உரிமம் பெறாமல் விதை விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை**

ஊட்டி: விதை விற்பனையாளர்கள் உரிமம் இல்லாமலோ அல்லது உரிமத்தை புதுப்பிக்காமலோ விதை விற்பனை செய்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து விதை ஆய்வு துணை இயக்குநர் பொன்னுசாமி நடேசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து விதை விற்பனையாளர்கள் தங்கள் விதை விற்பனை உரிமம் காலாவதியாகும் முன்னரே புதுப்பித்து கொள்ள வேண்டும்.விதை வணிக உரிமம் மூன்றாண்டுகளுக்கு செல்லத்தக்கதாகும். புதுப்பித்தலுக்கு ரூ.20ஐ உரிய தலைப்பில் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும். உரிமம் இல்லாமலோ அல்லது புதுப்பிக்காமலோ விதை விற்பனை செய்தால் விதை கட்டுப்பாடு ஆணையின் படி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

விதைகள் விற்பனை செய்யும் போது விற்பனை ரசீதில், விதை வாங்கும் விவசாயி பெயர், முழு முகவரி, பயிர், ரகத்தின் பெயர், குவியல் எண், காலாவதி தேதி, விவசாயியின் கையொப்பம், விற்பனையாளரின் கையொப்பம் ஆகியவை அவசியம் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு மாதமும் 5ம் தேதிக்குள் விதை இருப்பு மற்றும் விற்பனை விபரம் உரிய படிவத்தில் கோவை விதை ஆய்வு துணை இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். விற்பனையாளர்கள் பணி விதை மாதிரிகளை விதை பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி தரத்தை உறுதிப்படுத்தி கொள்ள வேண்டும். காலாவதியான விதைகளை இருப்பு வைத்தாலோ விற்பனை செய்தலோ சட்டப்படி குற்றமாகும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

**மக்காச்சோள விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேரில் ரீ1 லட்சம் வருமானம் திட்ட பயிற்சி**

வேப்பந்தட்டை, : பெரம்பலூர் மாவட்டம் வாலிகண்டாபுரம் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர்(க) கதிரவன் வெளியிட்டுள்ள அறிக்கை:

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் வருமானத்தை பெருக்க பருத்தி மற்றும் மக்காச்சோளத்தில் சிறந்த உழவியல் முறைகளை பின்பற்றி குறைந்த செலவில் மகசூலை பெருக்க ஒரு ஹெக்டேரில் ஒரு லட்சம் வருமானம் எனும் சிறப்பு திட்டத்தை மாவட்டத்தில் கலெக்டர் தரேஸ் அகமது அறிமுகப்படுத்தியுள்ளார். இத்திட்டத்தின் கீழ் வேப்பூர் வட்டார மக்காச்சோள விவசாயிகளுக்கு செயல்விளக்கங்களுடன் கூடிய பயிற்சி ரோவர் வேளாண் அறி வியல் மையத்தில் நடந்தது. இதில் மக்காச்சோள சாகுபடியில் குறைந்த செலவில் அதிக மகசூல் பெற உதவும் உழவியல் முறைகள், பயிர் பாதுகாப்பு முறை, ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்து வேளாண் அறிவியல் மைய விஞ்ஞானிகள் திவ்யா,

வசந்தகுமார், வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் பாஸ்கரன் ஆகியோர் பயிற்சி அளித்தனர். கலெக் டர் தரேஸ் அகமது பயிற்சி யை மேல்பார்வையிட்டார்.

வேளாண்துறை இணை இயக்குனர் சங்கரலிங்கம், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கனகசபை, உழவர் பயிற்சி மைய துணை இயக்குனர் ஆல்பிரட், வேப்பூர் வட்டார வேளாண் அலுவலர்கள், உதவி வேளாண் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**தென்னையை தாக்கும் சிலந்தியை கட்டுப்படுத்தும் முறைகள் வேளாண் அதிகாரிகள் விளக்கம்**

சேதுபாவாசத்திரம், : தென்னையை தாக்கும் ஈரியோபைட் சிலந்தியை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து வேளாண் அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்.

சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் பெரியசாமி, வேளாண் அலுவலர் மதியரசன் ஆகியோர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தென்னையை தாக்கும் ஈரியோபைட் சிலந்தி மிகச்சிறிய வெளிறிய பழுப்பு நிற தோற்றம் உடையவை. முட்டை பருவம், 2 புழு பருவங்கள் மற்றும் வளர்ந்த சிலந்தி என 4 நிலைகளை கொண்டுள்ளது. 7 முதல் 9 நாட்களை வாழ்க்கை சரிதமாக கொண்டவை. 4 கால்களை கொண்ட ஊசி போன்ற வாய் அமைப்பு உள்ளவை. பெண் சிலந்தி 30 முதல் 50 முட்டைகள் வரை இடும். இச்சிலந்தி இளங்குரும்பைகளின் தொட்டுகளுக்கு அடியில் இருந்துகொண்டு குரும்பையின் மென்மையான திசுக்களில் இருந்து சாற்றை உறிஞ்சி குடித்து உயிர் வாழ்கிறது. 1 முதல் 6 மாத இளங்குரும்பைகளில் சாற்றை உறிஞ்சுவதால் தொட்டுக்கு கீழே முக்கோண வடிவில் வெளிர் மஞ்சள் அல்லது பழுப்பு நிற திட்டுக்கள் ஏற்படும்.

பாதிக்கப்பட்ட குரும்பைகள் வளர்ந்து இளம் காய்களாக மாறும்போது பழுப்பு நிற பகுதியின் அளவு மேலும் அதிகமாகி நீளவாக்கில் சிறு சிறு வெடிப்புகள் தோன்றும். முற்றிய காய்களில் இப்பழுப்பு நிற திட்டுகள் கடினமாவதால் நீளவாக்கில் பெரிய வெடிப்புகள் ஏற்படும். அதிலிருந்து பிசின்போன்ற திரவம் வெளிப்படும். மேலும் 4 மாத இளங்குரும்பைகள் உதிர்ந்துவிழும் வாய்ப்புள்ளது. இதனால் காய்களின் அளவு சிறுத்து, பருப்பின் அளவும் 10 முதல் 30 சதவீதம் வரை குறைந்து விடுகிறது. இத்துடன் தேங்காய் உரிப்பதும் கடினமாகிறது. எண்ணிக்கை குறைவதில்லை. ஆனால் காய்களின் அளவு சிறுத்துவிடுகிறது.

இதனால் வியாபாரிகள் நிராகரித்து விடுகின்றனர். தேங்காய் உரிமட்டை கடினமாவதால் அதிலிருந்து கிடைக்கும் நாரின் அளவும், தரமும் பாதிக்கப்படுகிறது. இந்த சிலந்தியை கட்டுப்படுத்த ஒரு மரத்திற்கு ஓராண்டுக்கு யூரியா 1.300 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 2 கிலோ, பொட்டாஷ் 3.500 கிலோ, வேப்பம்புண்ணாக்கு 5 கிலோ, நன்கு மக்கிய தொழு உரம் 50 கிலோ மற்றும் நுண்ணூட்ட சத்துக்களான போராக்ஸ் 50 கிராம், ஜிப்சம் ஒரு கிலோ, மெக்னீசியம் சல்பேட் அரை கிலோ இடவேண்டும். மேலும் அசார்டிராக்டின் ஒரு சதவீத தாவர பூச்சிக்கொல்லி மருந்தை சிறு கைதெளிப்பான் மூலம் 45 நாட்கள் இடைவெளியில் 1 முதல் 6 மாத குரும்பைகளின் மேல் படும்படி குறைந்தது 3 முறைகள் தெளிக்க வேண்டும்.

முதல் முறை அசார்டிராக்டின் ஒரு சதவீத மருந்து 5 மில்லியை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். 2வது முறை 30 மில்லி வேப்பெண்ணையை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து அத்துடன் டீபால் ஒட்டுதிரவம் சிறிதளவு சேர்த்து தெளிக்கவேண்டும். 3வது முறை அசார்டிராக்டின் ஒரு சதவீத மருந்து 5 மில்லியை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

இந்த மருந்தை ஜனவரி முதல் ஜூன் மாதம் வரை உள்ள காலத்தில் தெளிப்பது

நல்ல பலனை தரும். கைதெளிப்பான் கொண்டு தெளிக்க முடியாத உயரமான மரங்களுக்கு அசார்டிராக்டின் ஒரு சத மருந்து 10 மில்லி மருந்தை 10 மில்லி தண்ணீரில் கலந்து வேரில் கட்டி இச்சிலந்தி மூலம் ஏற்படும் சேதத்தை வெகுவாக கட்டுப்படுத்தலாம். இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

**நீர் இல்லாத காலங்களில் மாற்றுப்பயிர் சாகுபடி முறையை கையாண்டால் நல்ல வருமானம் உழவர் மன்ற துவக்க விழாவில் தகவல்**

திருவாரூர், : நீர் இல்லாத காலங்களில் மாற்றுப்பயிர் பயிரிடுதல் முறை யை கடைப்பிடித்தால் நல்ல வருமானம் நல்ல வரு மானம் ஈட்ட முடியும் என்று புதுமை உழவர் மன்ற துவக்க விழாவில் கலெக்டர் நடராஜன் பேசினார்.

திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரியில் மாங் குடி புதுமை உழவர் மன்ற துவக்க விழா நடைபெற்றது. பேரூராட்சி தலைவர் செந்தில், இணை இயக்குநர் வேளாண்மை கணேசன், துணை இயக்குநர் மயில்வாகனன், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் ரவிச்சந்திரன், நபார்டு வங்கி பொதுமேலாளர் ரவிசங்கர், வேளாண் அறிவியல் மைய பேராசிரியர் தாமோத ரன் உள்பட அரசு அலுவலர்கள், விவசாயிகள் முன்னிலை வகித்தனர்.

திருவாரூர் கலெக்டர், உழவர் மன்ற விழாவை துவக்கி வைத்து பேசியதாவது: நவீன வேளாண் கருவி களை பயன்படுத்தி நேரத்தையும், பொருட்செலவை யும் விவசாயிகள் குறைக்க முடியும். இத்தகைய கருத்துக்களை அனைத்து விவசாயிகளிடமும் கொண்டு சென்று அவர் களை கடைபிடிக்க செய்வ தில் உழவர் மன்றத்தினர் முனைப்போடு செயல்பட வேண்டும். மேலும் விவசாய பணிகளுக்கு வங்கிக்கடன் பெற்றுத் தருவதிலும், பிற பகுதிகளில் உள்ள விவசாயிகள் கடைபிடிக்கும் வேளாண்மை தொழில்நுட்ப உத்திகளை பார்வையிட்டு அவற்றை நமது மாவட்ட விவசாயிகள் கடைபிடிக்கச் செய்வதிலும் உழவர் மன்றத்தினர் ஈடுபாட்டுடன் பணியாற்ற வேண்டும்

குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டம் மூலம் திருவாரூர் மாவட்டத்தில் விவசாய பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. குறைந்த நீரைக் கொண்டு அதிக பரப்பளவில் பாசனம் செய்து பயன்பெற சொட்டுநீர் பாசனத்திற்கு சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியம் அளிக்கப்படுகிறது.

மேலும் தொழில்நுட்ப உத்திகளை பயன்படுத்தி வேளாண்மை உற்பத்தியை இரண்டு மடங்காகவும், விவசாயிகளின் வருமானத்தை மூன்று மடங்காகவும் உயர்த்தும் வகையில் ஒருங்கிணைந்த பண்ணையம் செயல்படுத்தப்பட்டு வரு கிறது. விவசாயிகள் தங்கள் நிலங்களில் தொடர்ந்து பயிரிடும் பயிர்களோடு, பட்டு வளர்ப்பு, பரண்மேல் ஆடு வளர்த்தல், நீர் இல்லாத காலங்களில் மாற்றுப்பயிர் பயிரிடுதல் ஆகிய முறை களை கடைபிடிப்பதன் மூலம் தொடர்ச்சியான நல்ல வருமானத்தை ஈட்ட முடியும்.

கடந்த ஆண்டு திருவா ரூர் மாவட்டத்தில் நீர் பற்றாக்குறை காரணமாக பல்வேறு பகுதிகளில் மக்காச்சோளம் பயிரிடப்பட்டதில் நல்ல விளைச்சல் வந்துள்ளது. இதுபோன்ற தகவல்களையெல்லாம் மற்ற விவசாயிகளிடம் எடுத்துக்கூறி அவர்களையும் பலனடைய செய்கின்ற பணியை உழவர் மன்றங்கள் செய்திட வேண்டும் என்றார்.

## நீடாமங்கலம் வேளாண் கோட்டத்தில் இயந்திரம் மூலம் குறுவை நடவு தீவிரம் ஒரு ஏக்கருக்கு பீ5,000 செலவு

நீடாமங்கலம், : நீடாமங்கலம் வேளாண்மை கோட்டத்தில் குறுவை இயந்திர நடவு தீவிரமடைந்துள்ளது. இதனால் ஒரு ஏக்கருக்கு ரூ.5,000 மட்டுமே செலவாகிறது.

திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வட்டாரத்தில் குறுவை நடவுப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. அதிக பரப்பளவில் திருந்திய நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பெரும்பாலான விவசாயிகள் கூலிக்கு ஆட்கள் கிடைக்காததால் இயந்திரம் மூலம் நடவு பணி மேற்கொண்டுள்ளனர். இயந்திரம்

மூலம் நடவுபணி மேற்கொள்வதால் வயது குறைந்த நாற்றுகளை நடவு செய்ய முடிகிறது. 14 நாள் முதல் 20 நாள்வரை நடவு செய்து வருகிறார்கள். வரிசையாக நடவு செய்வதால் இயந்திரம் மூலம் களை எடுக்க முடியும் எனவும், கோணாவீடர் கருவி மூலம் மண்ணை கிளறி விடமுடியும், இதனால் பயிருக்கு அதிக துா்ா் கட்டும் திறன் பயிருக்கு கிடைக்கிறது. மேலும் பயிர் எண்ணிக்கையை பராமரிக்க முடிகிறது. இதனால் பயிர் நல்ல வளர்ச்சி அடைந்து அதிக துா்ா்கட்டி வாளிப்பான கதிர்கள் கிடைப்பதால் அதிக மகசூல் கிடைக்கிறது என விவசாயிகள் தெரிவித்தனர்.

மேலும் ஒரு ஏக்கர் நடவு செய்ய கூலியாக ரூ.5,000 முதல் 5,400 ரூபாய் வரை செலவாகிறது. இதில் விதை செலவு, நாற்றங்கால் தயாரிப்பு செலவு, தண்ணீர் பாய்ச்சும் செலவு, களைக் கொல்லி இடும் செலவு ஆகியவையும் அடங்கும். நாற்றங்காலுக்கு இடம் ஒதுக்குவது, விவசாயிகள் நாற்றங்கால் தயாரிக்க இடம் ஒதுக்கும்போது அருகாமையில் அறுவடை செய்யும் பயிர்களுக்கு தண்ணீர் பாய்வதால் அறுவடை செய்யமுடியாமல் போவதும் தவிர்க்கப்படுகிறது. இதனால் ஒரே நேரத்தில் நடவு பணி மேற்கொள்ளும் போது ஏற்படும் ஆள் பற்றாக்குறை தவிர்க்கப்படுகிறது. இதன்மூலம் இயந்திர நடவு பணி அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது என விவசாயிகள் தெரிவித்தனர். நீடாமங்கலம் ஒன்றிய பகுதியில் 10 ஆயிரம் ஏக்கர் குறுவை நடவு நடைபெற்றுள்ளது. 37ஆயிரம் ஏக்கர் சம்பா சாகுபடிக்கு தயாராக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## 4 ஆயிரம் ஏக்கர் பாசனத்திற்கு 18ம் கால்வாயில் தண்ணீர் திறக்க தமிழக முதல்வர் உத்தரவிட வேண்டும் விவசாயிகள் கோரிக்கை

கூடலூர், : உத்தமபாளையம் மற்றும் போடி வட்டத்திலுள்ள 4 ஆயிரம் ஏக்கர் பாசனத்திற்கு 18ம் கால்வாயில் இருந்து இந்தாண்டு தண்ணீர் திறந்து விட தமிழக முதல்வர் உத்தரவிட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேனி மாவட்டத்தில் பெரியாறு, சண்முகாநதி, வைகை, சுருளியாறு, வரட்டாறு, கொட்டக்குடி ஆறு என ஆறுகள் பல இருந்தும் விவசாயத்திற்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டது. ஏற்கனவே பெரியாற்றை நம்பி 17 வாய்கால்கள் இருந்தன. இதனுடன் புதிதாக 18ம் கால்வாய் என்ற பெயருடன் லோயர்கேம்பிலிருந்து 800 மீட்டர் கீழே தலைமதகில் இருந்து 40 கிமீ தூரத்திற்கு கால்வாய் வெட்டி உருவாக்கப்பட்டது. முல்லைப்பெரியாறு அணையில் நீர்மட்டம் உயரும்போது வெளியேறும் உபரி நீரையும், மழை காலங்களில் மேற்குத்தொடர்ச்சி மலையிலிருந்து வரும் தண்ணீரையும் கூடலூர், கம்பம், பாளையம், தேவாரம் வழியாக சுத்தகங்கை ஓடைக்கு கொண்டு சென்று இணைக்கும் திட்டம்தான் 18ம் கால்வாய் திட்டம்.

முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் உயரும்போது அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீரிலிருந்து, வினாடிக்கு 250 கனஅடி தண்ணீர் வீதம் 9 நாட்கள் இக்கால்வாய் வழி தண்ணீர் வெளியேற்றப்படும். இத்தண்ணீர் மூலம் உத்தமபாளையம் தாலுகாவில் 10 கிராமங்களில் உள்ள 29 கண்மாய்களும், போடிதாலுகாவில் 3 கிராமங்களில் உள்ள 15 கண்மாய்களும் நிரம்பும். இதனால் நிலத்தடிநீர் பெருகுவதுடன் இக்கண்மாய் நீரினால் உத்தமபாளையம் தாலுகாவில் 2ஆயிரத்து 500 ஏக்கர் நிலமும், போடிதாலுகாவில் 2ஆயிரம் ஏக்கர் நிலங்களும் பாசனம் பெறும்.

இத்திட்டம் 1999ல், அன்றைய முதல்வர் கருணாநிதியால் ரூ26.52 கோடி மதிப்பீட்டில் துவக்க அடிக்கல் நாட்டப்பட்டது. பணிகள் 2009 மார்ச் 31 முடிவுபெற்று வெள்ளோட்டம் பார்க்கப்பட்டது. ஆனால், 2010 ஆக்டோபர் 23ல் வாய்க்காலில் முதன்முறையாக விவசாயத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. திருத்திய திட்ட மதிப்பீடும் ரூ33.55 கோடியாக உயர்ந்தது. கடந்த 2011ம் ஆண்டு, பெரியாறு, வைகை அணைகளில் மழையினால் நீர்மட்டம் உயர்ந்ததால் நவம்பர் 10ல் 18ம் கால்வாய் மூலம் விவசாயத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால்

உத்தமபாளையம், போடிவட்டத்திலுள்ள ஏராளமான தரிசுநிலங்கள் விளைநிலமானதால் உணவு உற்பத்தி இருமடங்கானது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

கடந்த ஆண்டு பருவமழை ஏமாற்றியதால் அணைகளின் நீர்மட்டம் குறைந்தது. இதனால் 18ம் கால்வாயில் தண்ணீர் திறக்கவில்லை. பெரியாறு, வைகை அணைகளின் இருப்புநீர் 6ஆயிரத்து 250 மில்லியன் கனஅடி இருந்தால் மட்டுமே 18ம் கால்வாயில் தண்ணீர் திறக்கமுடியும் எனஅதிகாரிகள் கூறினர்.

தற்போது பெரியாறு நீர்பிடிப்பு பகுதியில் தொடர் மழை பெய்து வருவதால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. அணையின் நீர்மட்டமும் உயர்ந்து கொண்டு வருகிறது. நேற்று காலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 127.80 அடியாக உயர்ந்துள்ளது.

பெரியாறு, வைகை அணைகளின் இருப்புநீர் 6ஆயிரத்து 200 மில்லியன் கனஅடியை எட்டி உள்ளது. இத்தருணத்தில் 18ம் கால்வாயில் தண்ணீர் திறந்தால், இப்பகுதியிலுள்ள தரிசு நிலங்கள் விளைநிலமாக மாறும். எனவே, 18ம் கால்வாய் மூலம் பாசனத்திற்கு தண்ணீர் திறக்க தமிழக முதல்வர் உத்தரவிட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கனவு நனவாகுமா?

இதுகுறித்து பெரியாறு அணை மீட்புக்குழு இளைஞர் பேரவைத்தலைவர் ரஞ்சித்குமார் கூறுகையில், 18ம் கால்வாய் மூலம் நேர்முக, மறைமுக பாசனமாக 10 ஆயிரம் ஏக்கர் பயன்பெறுகிறது. பெரியாறு அணையில் அதிகளவு தண்ணீர் இருந்தால் மட்டுமே 18ம் கால்வாயில் தண்ணீர் திறக்கப்படுகிறது. கடந்த ஆண்டு தண்ணீர் திறக்கப்படாததால் இப்பகுதியில் விவசாயம் பாதித்தது. தற்போது அணையின் நீர்மட்டம் 128 அடியை தொட்டுள்ளது. அணையிலிருந்து அதிக அளவு தண்ணீர் வெளியேற்றுவதால் இந்தாண்டும் கால்வாயில் தண்ணீர் திறப்பது

கனவாகிப்போகுமோ என விவசாயிகள் வருத்தத்தில் உள்ளனர். எனவே 18ம் கால்வாயில் தண்ணீர் திறக்கக்கோரி விவசாய சங்கம் சார்பில் பொதுப்பணித்துறை அதிகாரிகளை நேரில் சந்தித்து முறையிட்டுள்ளோம் மேலும், இதுகுறித்து நடவடிக்கை எடுக்க கோரி தமிழக முதல்வர், கலெக்டருக்கு மனு அனுப்பி உள்ளோம், என்றனர்.

**கொள்முதல் நிலையங்கள் கொப்பரையை முழுமையாக பெற உடனடியாக உத்தரவிட வேண்டும்**

திருப்பூர்: கொப்பரையை முழுமையாக வாங்கிக் கொள்ள கொள்முதல் நிலையங்களுக்கு உத்தரவிட வேண்டும் என குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர். திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் கோவிந்தராஜ் தலைமையிலும், மாவட்ட வருவாய் அலுவலர் கஜலட்சுமி முன்னிலையிலும் நடந்தது. கூட்டம் துவங்கியதும், கடந்த கூட்டத்தில் பெற்ற மனுக்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதையடுத்து விவசாயிகள் பேசியதாவது: மனோகரன்: 6 மாத இடைவெளிக்குப் பிறகு கடந்த மாதத்திலிருந்து தான் கொப்பரை கொள்முதல் நடக்கிறது. கொப்பரைக்கு வெளி சந்தையில் விலையில்லாததால், கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாக விவசாயிகள் தேங்காயை விற்காமல் இருப்பு வைத்துள்ளனர். விவசாயிகளிடம் தேங்கி உள்ள தேங்காயை கொப்பரை செய்து விற்க கார்டு அடிப்படையிலான குறியீட்டைத் தளர்த்தி முழு அளவில் கொப்பரையை வாங்கிக்கொள்ள கொள் முதல் நிலையங்களுக்கு உத்தரவிட வேண்டும்.

ஈஸ்வரமூர்த்தி: உடுமலையில் உள்ள 6 வாய்க்கால்களிலும், பாசனத்திற்காக

தண்ணீர் திறக்க ப்பட்டுள்ளது. இதேபோல் தாராபுரத்தில் உள்ள 4 வாய்க்கால்களிலும் தண்ணீர் திறந்து விட நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகஸ்ட் முதல் வாரத்திற்குள் திறந்து விட்டால் விவசாயிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும். மின் வாரியத்தில் சுயநிதி மின் இணைப்புத் திட்டத்தில் ரூ. 5 ஆயிரம், ரூ.10 ஆயிரம் என பணம் கட்டி காத்திருக்கிறோம். ஆனால் இது வரை மின் இணைப்பு கிடைக்வில்லை. தாராபுரம் அலங்கியல் கால்நடை மருத்துவமனையி சுற்றுச்சுவர் கட்டித்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மௌனகுருசாமி: வறட்சி மாவட்டமாக நமது மாவட்டம் அறிவிக்கப்பட்டு, வறட்சி நிரவாணமும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் உண்மையில் அதிகம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் முழுமையாக கிடைக்கவில்லை. குறிப்பாக குடிமங்கலம் ஊராட்சிப் பகுதியில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் முழுமையாக வழங்கப்படவில்லை. .துரை: உடுமலை பூலாங்கிணறு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில், செயலாளாராக இருந்த ஒருவர் ஒரே ஆண்டில் ரூ.22 லட்சத்தை கையாடல் செய்தார். இதையடுத்து அவர் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டார்.

அப்போது, கையாடல், செய்த பணத்தில் ஒரு பங்கையும் அவர் செலுத்தினார். ஆனால் தற்போது அவரை அதே இடத்தில் பணியில் சேர்ந்துகொள்ளும்படி, கூட்டுறவு துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ரூ. 60 லட்சம் வரவு செலவு இருந்தபோபோதே ரூ.22 கையாடல் நடந்துள்ள நிலையில், தற்போது, ரூ.3.75 கோடி வரவு செலவு உள்ள நிலையில் அவரை அதே இடத்தில் எப்படி நியமிக்கலாம். ஆகவே இதை தடுத்து நிறுத்த வேண்டும்.

வெள்ளிங்கிரி நாதன்: மலையப்பாளையம் பகுதியில், தெருநாய்களின் தொல்லை

காரணாக வெங்காயப் பயிர்கள் நாசமடைகிறது. இதுகுறித்து கடந்த கூட்டத்தில் புகார் தெரிவித்தும், இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வறட்சி நிவாரணம் கிடைக்காதவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டது. ஆனால் கிராம நிர்வாக அலுவலர்கள் விண்ணப்பங்களை பெற மறுக்கிறார்கள்.

ஓதிச்சாமி: திருப்பூர் மாவட்டம் வறட்சியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், வாங்கிய விவசாய கடனை உடனடியாக செலுத்தும்படி, இறந்துபோன விவசாயி ஒருவருக்கு வங்கி ஒன்று எச்சரிக் கை நோட்டீஸ் அனுப்பியுள்ளது. பணம் கட்டாவிட்டால் டிராக்டர் உள்ளிட்ட விவச £ய கருவிக ளை பறிமுதல் செய்வதாக மிரட்டுகிறார்கள். இவ்வாறு விவசாயிகள் பேசினர்.

**தென்மேற்கு பருவ மழை தீவிரம் ஆழியார் அணை நீர்மட்டம் 100 அடி**

பொள்ளாச்சி: தென்மேற்கு பருவமழை தொடர்ந்து பெய்வதால், பொள்ளாச்சியை அடுத்த ஆழியார் அணையின் நீர்மட்டம் ஒரு ஆண்டுக்குப் பிறகு நேற்று 100 அடியை எட்டியது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி யடைந்துள்ளனர்.

பரம்பிக்குளம் ஆழியார் பாசனத்திட்டத்தில் சோலை யார், பரம்பிக்குளம், ஆழியார், திருமூர்த்தி ஆகிய அணைகள் முக்கியமானவைகளாகும். சோலையார் அணையில் இருந்து பரம்பிக் குளம் அணை வழியாக சர்க்கார்பதி மின் நிலையத்திற்கு தண்ணீர் கொண்டு வரப்படுகிறது.

அங்கு மின் உற்பத்தி முடிந்ததும் தண்ணீர் வெளியேற்றப்பட்டு கான்டூர் கால்வாய் மூலம் ஆழியார் மற்றும் திருமூர்த்தி அணைகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது. இந்த இரு அணைகள் மூலம் கோவை, திருப்பூர்,கரூர் மாவட்டங்களில் சுமார் 4 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது.

ஆழியார் அணைக்கு கான்டூர் கால்வாய் மட்டுமின்றி சின்னாறு, அப்பர் ஆழியார்,

குரங்கு அருவி மூலமாகவும் தண்ணீர் வருகிறது.

இந்த அணையின் மொத்த உயரம் 120 அடியா கும். அணையில் 3 ஆயிரத்து 864 மில்லியன் கன அடி தண்ணீர் சேமித்து வைக்க லாம். பிஏபி. ஒப்பந்தப்படி ஆழியார் அணையில் இருந்து கேரளாவுக்கு ஆண்டுதோறும் குறிப்பிட்ட டிஎம்சி தண்ணீர் வழங்கப்படுகிறது. அதோடு வேட்டைக்காரன் புதூர் கால்வாய், சேத்துமடை கால்வாய், வடக்கலூர் கால்வாய் உள் ளிட்ட கால்வாய்கள் மூலம் பாசனத்திற்கு தண்ணீர் வழங்கப்படுகிறது. மேலும் பொள்ளாச்சி நகரம், வழி யோர கிராமங்கள், 10 பேரூராட்சிகள், குறிச்சி, குனியமுத்தூர் நகராட்சி உள்ளிட்டவற்றிற்கும் ஆழியார் ஆற்றில் இருந்து குடிநீர் பெறப்படுகிறது.

ஆண்டுதோறும் கோடை காலங்களில் பல அணைகள் வறட்சியை சந்திக்கும்போது ஆழியார் அணையில் மட்டும் ஓரளவு தண்ணீர் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. 2011ம் ஆண்டு பெய்த பெய்த பருவமழையால் தொடர்ந்து 300 நாட்களுக்கும் மேல் ஆழியார் அணையின் நீர்மட்டம் 100அடியையும் தாண்டியிருந்தது. ஆனால் கடந்த ஒரு வருடமாக பருவமழை பொய்த்ததால் அணைக்கு தண்ணீர் வரத்து இன்றி நீர்மட்டம் குறைந்தது. கடந்த ஆண்டு(2012) ஆகஸ்ட் மாதம் நீர்மட்டம் 100 அடியாக இருந்தது. பின்னர் படிப்படியாக குறைந்து கடந்த மாதம் 55 அடிக்கு வந்தது.

இந்நிலையில் இந்த வருடம் தென்மேற்கு பருவமழை பொழிவு அதிக மாக உள்ளது. தொடர்ந்து 2 மாதமாக பெய்யும் மழையின் காரணமாக அணைக்கு தண்ணீர் வரத்து நாளுக்கு நாள் அதிகரித்தது. இதனால் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்தது. 45 நாட்களில் 45 அடி உயர்ந்துள்ளது. அணையின் நீர்மட்டம் நேற்று காலை 100 அடியை எட்டியது. வினாடிக்கு 1700 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இதனால், விவசாயத்திற்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படாது என்று விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

அதே போல் குடிநீர் தட்டுப்பாடு என்ற பிரச்னையும் ஏற்படாது என்பதால் பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

நேற்று காலை பெய்த மழையளவு வருமாறு (மி.மீட்டரில்): சோலையார் 53, பரம்பிக்குளம் 21, ஆழியார் 3, மேல்நீரார் 46, கீழ்நீரார் 60, வேட்டைக்காரன்புதூர் 9.4, மணக்கடவு 16, சர்க்கார்பதி 13, தூணக்கடவு 27, பெருவாரிபள்ளம் 20, காடம்பாறை 11, நல்லூர் 4.

**உற்பத்தியாளர்களுக்கு விதை சான்று நடைமுறை பயிற்சி**

திருச்சி, : விதை சான்று மற்றும் அங்கக சான் றுத்துறை சார்பில் அரசு விதை உற்பத்தியாளர்களுக்கான விதை சான்று நடை முறைகள் குறித்த பயிற்சி திருச்சி வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக கூட்ட மன்றத்தில் நடைபெற்றது. விதை ஆய்வு துணை இயக்குநர் முத்துக்கூரி வரவேற்றார்.

பயிற்சியினை தொடங்கி வைத்து திருச்சி மாவட்ட வேளாண் இணை இயக்குநர் குருராஜ்சிங் பேசுகையில், நடப்பு நிதியாண்டில் உணவு தானிய உற்பத்திக்கு 112 லட்சம் மெ.டன் இலக்கினை அடைய வேளாண்மைத்துறை அலுவலர்கள் முழுமுனைப்புடன் செயல்பட இலக்கு நிர்ணயித்து அதற்கென பல்வேறு மானிய திட்டங்களை தமிழக அரசு அறிவித்து வருகிறது. உணவு தானிய உற்பத்திக்கு மிகவும் அடிப்படை தரமான சான்று பெற்ற விதைகளே ஆகும். எனவே விவசாயிகளின் தேவைக்கேற்ப சான்று பெற்ற விதைகள் அரசு மூலம் 17 சதவீதமும், தனியார் விதை விற்பனையாளர்கள் மூலம் 33 சதவீதமும் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. அரசு மூலம் விநியோகம் செய்யப்பட்டு வரும் சான்று விதைகள் வேளாண்மை துறையில் அரசு விதை பண்ணைகள் மற்றும் விவசாயிகளின் வயல்களிலும் விதைப்பண்ணைகள் அமைக்கப்பட்டு கொள்முதல் செய்யப்படுகிறது. விதை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள துறை அலுவலர்கள்,

விதைச்சான்று நடை முறைகளை நன்கு தெரிந்து கொண்டு தரமான விதை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்குவதை கடமையாக கொண்டு செயல்பட வேண்டும் என்றார்.

திருச்சி மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குநர் ரவி பேசுகையில், அரசின் நோக்கம் தரமான விதை அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்க செய்வதே. நாம் அனைவரும் அதற்காக பாடுபட வேண்டும் என்றார். பயிற்சியில் அங்கக சான்றளிப்பு வேளாண்மை அலுவலர் நல்லேந்திரன், விதை சான்று அலுவலர்கள் ஆனந்தசெல்வி, சோழராஜன், சுரேஷ்குமார், ரங்கராஜன், விதை பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர்கள் ஜெயராணி, மனோன்மணி, வேளாண் உதவி இயக்குனர் மணிவண்ணன், விதை ஆய்வாளர் அருள்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

**வெளிநாட்டிலிருந்து 20% குறைந்த விலையில் உரங்கள் இறக்குமதி**




புதுடெல்லி : வெளிநாட்டில் இருந்து 20 சதவீதம் குறைந்த விலையில், நடப்பு ஆண்டின் முதல் காலாண்டில் உரங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. உரங்கள் பெருமளவில் வெளிநாடுகளில் இருந்துதான் இறக்குமதி செய்யப்படுகிறது. இதனால் ஏராளமான அன்னியச் செலா வணி செலாவகிறது. கடந்த ஆண்டைக் காட்டிலும், நடப்பாண்டின் முதல் காலாண்டில் 20% குறைந்த விலையில், வெளிநாட்டில் இருந்து உரங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இதன் மூலம் அரசுக்கு அந்நியச் செலாவணி மிச்சமாகி உள்ளதுடன், மானியச் செலவும் பெருமளவில் குறைந்துள்ளது. தற்போது யூரியா உரம் ஒரு டன் 5,360 என்ற விலையில் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. எனினும், அதிகபட்ச சில்லரை விலை மற்றும் உற்பத்தி/இறக்குமதி செலவு இடையிலான வித்தியாசத்தை மத்திய அரசே உற்பத்தியாளர்களுக்கு வழங்கி விடுகிறது. இதற்கிடையே, நடப்பாண்டில் உரங்களுக்கான மானியம் யி65,971.50 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் முதல் காலாண்டான ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலத்தில் 11.09 லட்சம் டன் உரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. ஒரு ஆண்டுக்கு முன்பு இருந்த இறக்குமதி அளவை காட்டிலும் இது 60 சதவீதம் அதிகம். மத்திய உரத்துறை அமைச்சக அதிகாரி ஒருவர் கூறுகையில், ‘‘கடந்த ஆண்டில் ஒரு டன் உரம் ரூ.25,020 என்ற விலையில் இறக்குமதி செய்யப்பட்டது.

ஆனால், தற்போது ரூ.20,400 என்ற விலையில் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. எனினும், இறக்குமதி கட்டணம் டன்னுக்கு ரூ.32,400 ஆக உயர்ந்துள்ளது’’ என்றார். இந்தியாவில் 220 லட்சம் டன் உரங்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால், தேவை இதைவிட அதிகம் என்பதால், வெளிநாட்டில் இருந்து 80.44 லட்சம் டன் கடந்த ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**26.07.2013**

## மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்காக 10–ந் தேதி தண்ணீர் திறக்க வேண்டும் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தல்

திருவாரூர்,

மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்காக தண்ணீரை அடுத்த மாதம் (ஆகஸ்டு) 15–ந் தேதி திறக்க வேண்டும் என்று குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

திருவாரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது.
கூட்டத்திற்கு கலெக்டர்
சி.நடராசன் தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

திருவாரூர் மாவட்டத்தில் நேரடி நெல் விதைப்பின் மூலம் சென்ற ஆண்டு நல்ல மகசூல் கிடைத்துள்ளது. நிலத்தடி நீரை மேம்படுத்திட பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. ஆறுகளில் நீர் மூழ்கி தடுப்பணைகள் அமைக்கப்பட்டு வரு
கிறது. அனைத்து துறைகளும் திருவாரூர் மாவட்டத்தின் மீது தனி கவனம் செலுத்தி வருகிறது.

மேட்டூர் அணை திறப்பு

மாற்று பயிர் வெற்றியை தந்துள்ளது. தமிழகத்தில் உணவு உற்பத்தியில் திருவாரூர் மாவட்டம் முதன்மை இடம் பிடிக்கும். மேட்டூர் அணை திறப்பது குறித்து விவசாயிகளின்  ஒருமித்த கருத்தை நிச்சயம் அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும்.

பின்னர் விவசாயிகள் பேசினர். அதன்விவரம் வருமாறு:–

பாண்டியன்: மேட்டூர் அணை திறப்பது குறித்து பல்வேறு கருத்துகள் நிலவி வருகிறது. எந்த தேதியில் அணை திறக்கப்படும் என்பதை அரசு அறிவிக்காமல் உள்ளது. மேட்டூர் அணை அடுத்த மாதம் (ஆகஸ்டு) 10–ந் தேதி திறக்கப்பட வேண்டும் என்பது நமது மாவட்ட விவசாயிகள் ஒருமித்த கருத்தாக முன்மொழிகின்றேன்.

புதிய பயிர்க்கடன்

மாவட்ட நிர்வாகம் அரசின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். மீத்தேன் வாயு எடுப்பதற்கு இடைக்கால தடை விதித்த தமிழக அரசுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். விவசாயிகளுக்கு சாகுபடியை மேற்கொள்ள எவ்வித நிபந்தனையுமின்றி புதிய கடன்கள் வழங்கிட வேண்டும்.

கூட்டுறவு இணை பதிவாளர்: கூட்டுறவுத் துறை மூலமாக கடன் வழங்கிட ரூ.255 கோடி கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி மூலமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. காவிரி மன்னார்குடி ரெங்கநாதன்: பாமணி வடிவாய்க்கால் காட்பாடிக்கு பாசனம் தடைப்பட்டுள்ளது. இதனை சரிசெய்திட வேண்டும். சத்திய நாராயணன்: 100 நாள் வேலைத்திட்டத்தின் மூலம் பி–சேனல் வாய்க்கால்களை தூர்வாரிட வேண்டும். சம்பா சாகுபடிக்கு ஏற்ற விதைகள் குறித்து விவசாயிகளுக்கு அதிகாரிகள் விளக்கிட வேண்டும்.

ராமகிருஷ்ணன்: திருப்பள்ளிமுக்கூடல் பகுதியில் வெட்டாற்றில் நிலத்தடி நீர் சேமிப்புத் திட்டத்தை செயல்படுத்திட வேண்டும். பழுதடைந்த ரெகுலேட்டர்களை சீரமைக்க வேண்டும். வளப்பாறு, புத்தாறு, வெட்டாறு ஆகியவற்றில் உள்ள சீமைக் காட்டாமணி செடிகளை அகற்றிட வேண்டும். மூங்கில்குடி–ஆணைக்குப்பம் சாலைப்பணியை விரைந்து முடித்திட வேண்டும்.

ராமைய்யா: இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கின்ற வகையில் உழவர் மன்றம் உருவாக்கப்பட்டது போல தொழிலாளர் மன்றமும் ஏற்படுத்திட வேண்டும்.

சாரநாதன்: கரும்புக்கு உரிய நிலுவைத் தொகையை நீண்ட காலமாக வழங்கப்படாமல் உள்ளது.

ஜெயராமன்: கட்டிமேடு பாசன வாய்க்கால் ஆக்கிரமைப்பு செய்யப்பட்டுள்ளது. உடன் அதனை அப்புறப்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தமிழ்ச்செல்வி: பாசன மதகுகளை சீரமைக்க வேண்டும். உரங்கள் தட்டுப்பாடின்றி விவசாயிகளுக்கு கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கல்யாணசுந்தரம்: ஆடு, மாடுகளுக்கு குடிநீர் பிரச்சனைகளை தீர்க்கும் வகையில்ஆறுகளில் தண்ணீர் திறந்து விட வேண்டும்.

ராமச்சந்திரன்: பொதுப்பணித்துறை மூலம் தூர்வாரும் பணிகள் நடைபெறவில்லை.

ராமனுஜம்: மேட்டூர் அணையில் 120 அடி தண்ணீர் நிரம்பியப் பின் பாசனத்திற்கு திறந்து விட வேண்டும். நெல் கிலோ ரூ.20 விலை நிர்ணயம் செய்திட வேண்டும். இவ்வாறு விவசாயிகள் பேசினர்.

முன்னதாக நேரடி நெல் சாகுபடி குறித்து ஆடுதுறை நெல் ஆராய்ச்சி மைய உதவி பேராசிரியர் ரமேஷ் விளக்கமளித்தார்.

**பரமத்தி வேலூரில் வெற்றிலை விலை சரிவு**

பரமத்தி வேலூர்,

பரமத்தி வேலூர் ஏல மார்க்கெட்டில் வெற்றிலை விலை சரிவு அடைந்தது.

<u>வெற்றிலை பயிரீடு</u>

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகா காவிரி கரையோர பகுதிகளில் உள்ள பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அணிச் சம்பாளையம், பொய்யேரி, நன்செய் இடையாறு, பாலப் பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சுமார் ஆயிரம் ஏக்கரில் வெற்றிலை பயிர் செய்யப்பட்டு உள்ளது.

இங்கு விளையும் வெற்றிலை கள் சேலம், ஊட்டி, கோவை, மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும், கர்நாடகா, ஆந்திரா, கேரளா, மகாராஷ்டிரா, குஜராத் உள்ளிட்ட பல்வேறு மாநிலங் களுக்கும் தினந்தோறும் லாரி கள் மற்றும் ரெயில்கள் மூல மாக அனுப்பப்பட்டு வரு கிறது.

<u>விலை சரிவு</u>

மேலும் பரமத்தி வேலூர் நான்கு ரோடு பழைய பைபாஸ் சாலையில் வெற்றிலை எல மார்க்கெட்டில் வெற்றிலை ஏலமும் நடைபெறும். கடந்த 15 நாட்களுக்கு முன்பு நடை பெற்ற ஏலத்தில் இளம்பயிர் கற்பூரி வெற்றிலை மார் 104 கவளிகள் கொண்ட சுமை ஒன்று ரூ.1,500–க்கும், இளம் பயிர் வெள்ளைக்கொடி வெற்றிலை மார் சுமை ஒன்று ரூ.5,000–க்கும், ஏலம் போனது. நேற்று முன்தினம் நடை பெற்ற ஏலத்தில் இளம்பயிர் கற்பூரி வெற்றிலை மார் 104 கவளிகள் கொண்ட சுமை ஒன்று ரூ.1,000–க்கும், இளம் பயிர் வெள்ளைக்கொடி வெற்றிலை மார் சுமை ஒன்று ரூ.4,000 முதல் ரூ.4,500–க்கும், ஏலம் போனது. ஆடி மாதம் என்பதாலும், திருமணம் உள்ளிட்ட விஷேக தினங்கள் இந்த மாதம் அதிகள வில் நடைபெறாது என்பதா லும் வெற்றிலையின் விலை சற்று சரிவடைந்து உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 5 காசுகள் சரிவு 335 காசுகளாக நிர்ணயம்**

நாமக்கல்,

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக 340 காசுகளாக நீடித்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை விலையை 5 காசுகள் குறைக்க முடிவு செய்தனர். எனவே முட்டை விலை 340 காசுகளில் இருந்து 335 காசுகளாக குறைந்து உள்ளது.

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:–

சென்னை–347, ஐதராபாத்–308, விஜயவாடா, தனுகு–313, பார்வாலா–291, மும்பை–343, மைசூர்–340, பெங்களூர்–340, கொல்கத்தா–365, டெல்லி–310.

கறிக்கோழி கிலோ ரூ.80–க்கும், முட்டைக்கோழி கிலோ ரூ.58–க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அவற்றின் விலைகளில் மாற்றம் செய்யப்படவில்லை.

பிறமண்டலங்களில் முட்டை விலை சரிவடைந்து வருகிறது. அதேசமயம் ஆடி மாதம் என்பதால், தமிழகத்திலும் முட்டை விற்பனை மந்தமாக உள்ளது. இதனை கருத்தில் கொண்டு முட்டை விலை குறைக்கப்பட்டு உள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

**கர்நாடக அணைகளில் இருந்து ஒகேனக்கல்லுக்கு தண்ணீர் வரத்து 20 ஆயிரம் கனஅடியாக குறைந்தது அருவியில் குளிக்க விதித்த தடையை நீக்க கோரிக்கை**

பென்னாகரம்,

கர்நாடக அணைகளில் இருந்து ஒகேனக்கல்லுக்கு தண்ணீர் வரத்து 20 ஆயிரம் கனஅடியாக குறைய தொடங்கியது. இதனால் ஒகேனக்கல் அருவியில் குளிக்கவும், பரிசலில் செல்லவும் விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும் என்று சுற்றுலா பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

<u>நீர்வரத்து அதிகரிப்பு</u>

கர்நாடக மாநிலம் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த ஒரு மாதமாக கனமழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகள் நிரம்பி வருகிறது. இதையடுத்து அணைகளில் இருந்து உபரி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. மேலும் காவிரி ஆறு கரைபுரண்டு வரும் பகுதிகளிலும் கனமழை பெய்து வருவதால் காவிரி ஆற்றில் இருந்து தண்ணீர் வரத்து அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில் கர்நாடக மாநிலம் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை கொட்டி வருவதால் கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளில் இருந்து அதிக அளவில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த தண்ணீர் கடந்த சில நாட்களுக்கு முன்பு ஒகேனக்கல்லை வந்தடைந்தது. இதன் காரணமாக ஒகேனக்கல் அருவியில் குளிக்கவும், பரிசலில் செல்லவும் சுற்றுலாப் பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டது.

<u>தண்ணீர் வரத்து குறைந்தது</u>

இதற்கிடையே நேற்று முன்தினம் காலை காவிரி ஆற்றில் வினாடிக்கு 33 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்தது. அது படிப்படியாக குறைந்து நேற்று காலை வினாடிக்கு 22 ஆயிரம் கனஅடியாக குறைய தொடங்கியது. பின்னர் மாலை 3 மணி அளவில் வினாடிக்கு 20 ஆயிரம் கனஅடியாக குறைந்தது. தண்ணீர் வரத்து குறைந்து காணப்பட்டாலும் சுற்றுலாப் பயணிகள், பொதுமக்கள் அருவியில் குளிக்கவும், பரிசலில் செல்லவும் மாவட்ட நிர்வாகம் சார்பில் விதிக்கப்பட்ட தடை தொடர்ந்து அமலில் இருந்து வருகிறது.மேலும் ஆங்காங்கே போலீசார் மற்றும் ஊர்க்காவல் படையினர் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு உள்ளனர். இதனையும் மீறி ஒருசில சுற்றுலா பயணிகள் காவிரி ஆற்றில் குளித்தனர். கர்நாடக அணைகள் வேகமாக நிரம்பி வருவதால் எந்த நேரத்திலும் தண்ணீர் வரத்து அதிகரிக்கும் என்று கருதி சுற்றுலா பயணிகள், பொதுமக்களை போலீசார் காவிரியில் குளிக்க அனுமதி மறுத்து கண்காணித்து வருகின்றனர். விடுமுறை நாட்கள் வருவதையொட்டி அருவிகளில் குளிக்கவும் பரிசலில் செல்லவும் மாவட்ட நிர்வாகம் சார்பில் விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும் என்று சுற்றுலா பயணிகள், பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.